# செந்தமிழ்



தொகுதி - 72 செப்டம்பர் 1978 பகுதி - 3

## மதுரைத் தமிழ்ச்சங்கக் காலாண்டு இதழ்

ஆசிரியர் :

டி. பி. எம். பெரியசுவாமி, எம். எல். ஏ.,



செயல்திறம் கொண்ட மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம், எம். ஏ. பி. டி., பி. எல்., அவர்களை மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலர் டி. பி. எம். பெரியசுவாமி அவர்கள் வரவேற்றுப் பாராட்டுகின்றார்.

# உள்ளுரை


| எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | இளங்கோவின் உள்ளம்<br>கி. நாகராசன், M. A., | 1 |
| 2. | வாழ்ந்து காட்டிய வண்டமிழ்ப் புலவர்<br>புலவர். திருமேனி நாகராசன் | 3 |
| 3. | சமூக சீர்திருத்தத்தில் பாரதிதாசன் பணி<br>டாக்டர் ஏ. என். பெருமாள், M. A., Ph. D., | 10 |
| 4. | " தூங்கு " எனும் திராவிடச் சொல்<br>டாக்டர் கோ. சுப்பையா, M. A., Ph. D., | 17 |
| 5. | மேனுட்டு நாகரிகமும் இந்திய நாகரிகமும்<br>கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர் | 29 |
| 6. | அழகு<br>கவியரசு. இளங்கம்பன் | 36 |
| 7. | தேசிங்குராஜன் வரலாறு<br>சி. கோ. தெய்வநாயகம், M. A., | 37 |
| 8. | மணி விழா நிகழ்ச்சி | 50 |
| 9. | மதிப்புரை | 52 |
| 10. | செய்திக் கதிர் | 55 |
| 11. | சங்கச் செய்திகள் | 58 |

# இளங்கோவின் உள்ளம்

கி. நாகராசன், எம். ஏ.,
சி. நா. கல்லூரி.

சமுதாய வளர்ச்சிக்கு மக்களின் மன எழுச்சியே அடிப்படை. எத்துன்பத்தையும் எதிர்த்து வெற்றிகொள்ளும் மனநிலை மக்களுக்கு இயல்பாய் அமைதல் வேண்டும். மனித ஆற்றலே முதன்மையானது என்கிற மனோநிலையை அவர்கள் அடைதல் வேண்டும். ஊழையும் உப்பக்கம் காணும் உறுதிமனம் ஒரு சமுதாயத்தின் வெற்றிக்கு அடித்தளம். அவ்வடித்தளம் நன்கு அமைய எழுத்தாளன் பெருந் துணை புரிகின்றான்.

'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்; தருமம் மறுபடி வெல்லும்' என்பது இயற்கையின் விதி. அதுவே உலக நியதி. புதுமைக் காப்பியம் படைத்த இளங்கோவடிகள் அந்நியதியையே மாற்றுகின்றார். அவர் மனநிலையே இம்மாற்றத்திற்குக் காரணம் ஆகும்.

'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' என்றார் பாரதி. இதற்கு ஈடான ஒரு மதிப்புரையைச் சிலப்பதிகாரத்திற்கு வழங்குதல் அரிது. 'உண்மை வெறும் புகழ்ச்சியில்லை' என்று அவரே கூறிவிடுகின்றார். அத்தகைய சீரிய காப்பியம் முப்பெரும் கொள்கைகளை வலியுறுத்தப் பாடப்பெற்றது என்பது பதிகத்தால் அறியப்படுகின்றது. அக் கொள்கைகளில் ஒன்றான 'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்பதைத் தான் எத்துணை வலிமையாகக் காட்டிவிடுகின்றார் இளங்கோவடிகள்.

கண்ணகி, மாதவி, கவுந்தியடிகள், மாதரி, கோப்பெருந்தேவி, கண்ணகியின் பெற்றோர், கோவலன், பாண்டியன் நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன், கோவலனின் பெற்றோர் ஆகியோர் சிலப்பதி- காரத்தின் பெரும்பாத்திரங்கள் எனலாம்.

இவ்வுலகத்தை வாழும் உலகமாகவும், துறவு உலகமாகவும் (Life affirmation and Life negation) பார்க்கிறது இளங்கோவின் உள்ளம். இறுதியில் அவல உலகமே விஞ்சுகிறது. 'இல்லோர் செம்மல்' ஆகிய கோவலன் வீண்பழி யேற்றுக் 'கல்லாக் களிமகன் ஒருவன் கையில் வெள்வாள் எறிந்து' கொலை செய்யப்படுகின்றான். 'கற்பின் கொழுந்து' ஆகிய கண்ணகி 'இம்மையும் இசையொரீஇ இனைந்தேங்கி' அழிகின்றாள். 'பூம்புகார்ப் பொற்றொடி' மாதவி 'போதித்தானம் புரிந்து அறம்' கொள்கின்றாள். 'மண்குளிரச் செய்யும் மறவேல் நெடுந்தகை' பாண்டியன் 'வினைவிளை காலம் ஆதலின்'

யாவதும் தேராளுகித் தீர்ப்பு செய்து உயிர் துறக்கின்றுன். 'குல முதற்றேவி' பாண்டிமாதேவி 'காதலன் துன்பம் காணுது' கழிகின்ருள். 'மைந்தற் குற்றதும் மடந்தைக் குற்றதும் செங்கோல் வேந்தற் குற்றதும் கேட்டு' மாசாத்துவான் துறவினை அடைகின்றுன். துறந்தோன் மனைவி 'இறந்த துயர் எய்தி இரங்கிமெய்' விடுகின்ருள். 'கண்ணகி தாதை கடவுளர் கோலத்து' துறவறம் மேற்கொள்கின்ருள். அவன் மனைக்கிழத்தி 'நல்லுயிர் நீத்துமெய்' விடுகின்ருள். 'தீதிலள், முதுமகள், செவ்வியள், அளியள்' ஆகிய மாதரி 'இடையிருள் யாமத்து எரியகம்' புகுகின்ருள். 'தவந்தரு சிறப்பின்' கவுந்தியடிகள் 'உண்ணுநோன்போடு உயிர் பதிப்பெயர் கின்ருர். ஏதுமறியா'மல்லல் மதுரையா ரெல்லாரும்' கொந்தழல் வெம்மைக்கு ஆளாகின்றனர்.

சேரன் செங்குட்டுவன் ஒருவன்தான் எஞ்சியுள்ளான். 'நீடுழி வாழ்க' என வாழ்த்துக்கு உரியவனுகின்றுன் அவன்.

இளங்கோ சேரனின் இளவல் இல்லை என்றும், அவருக்கும் சேர பரம்பரைக்கும் எத்தொடர்பும் இல்லையென்றும், அரசுரிமை தனக்கே உரியது என்ற சோதிடர் கூற்றுக் கேட்டு இளங்கோ துறவியானுர் என்பது பொருந்தாதென்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கூறுவர். கதை மாந்தர்களின் முடிவினையும், இளங்கோ காட்டும் அவலத்தையும் நோக்கின் அவர் சேர பரம்பரையைச் சார்ந்தவர் என்பது உண்மையாக இருக்கலாம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

உலக நோக்கில் ஏற்பட்ட ஒரு வெறுப்பையே, மனக்கொந்தளிப்பையே இளங்கோ காட்டுகிருர்; எப்படிப்பட்டவரும் அழிவர் என்பதை உணர்த்துகிருர். வன்மைத் தன்மையே அவரிடம் மிக்குள்ளது. தனது மனநிலையையே பாத்திரங்கள் வாயிலாகப் புகுத்துகின்ருர். வாழும் உலகமாக உலகை அவர் கருதவில்லை. ஊழ்வினையை முதன்மையாகப் பாடுபவர் மனிதத் தன்மையின் ஆற்றலை எப்படிப் பாடுவார்? 'வல்வினை வந்துருத்த காலைக் கணவனை யங்கு இழந்து போந்த கடுவினையேன் யான்' என்று கண்ணகியையே ஊழ்வினை பற்றிக் கூறவைக்கிருர். அவனையே தனது துறவு உள்ளம் கொண்ட தத்துவத்திற்கு உட்படுத்தி விடுகின்ருர்.

'ஊழ்வினை உருத்து வந்தூட்டும்' என்று உலகுக்கு உணர்த்துவதில் முனைப்பாக இருக்கும் இளங்கோவடிகள். 'ஊழையும் உப்பக்கம்' காணும்' மனித ஆற்றலைப் பற்றிச் சிறிதும் எண்ணவில்லை என்றே தோன்றுகிறது.

## வாழ்ந்து காட்டிய வண்டமிழ்ப் புலவர்

புலவர். திருமேனி நாகராசன்,
காரைக்கால்.

"பொருளிலார்க் கிவ்வுலக மில்" என்பது திருக்குறள். "வடுவிலா வையத்து மன்னிய மூன்றில், நடுவண தெய்த விருதலையும் எய்தும்" என்பது நாலடியார். "வறியார் இருமை அறியார்" என்பது திருச்சிற்றம்பலக்கோவை. "பொருளே மன்ற பொருளே" என்பது குறுந்தொகை. இவற்றால் பொருளின் சிறப்பும் இன்றியமையாமையும் தெற்றெனப் புலப்படும்.

அவ் வின்றியமையாப் பொருளைத் தேடும் பொருட்டுப் பண்டைய தமிழகத்தில் இல்லாளைப் பிரிந்து தலைவன் வேற்று நாடு சென்ற கதைகள் மிகவுண்டு. அப்பொழுது பிரிவை எண்ணி அவனடையும் துன்பத்திற்கோர் எல்லையில்லை. எப்படி?[1]. "பேரமர்க் கண்ணி இருந்த ஊரே, நெடுஞ்சேண் ஆரிடை அதுவே நெஞ்சே, பெருவிதுப் புற்றன்றே நோகோ யானே" என்பது பிரிவுற்ற ஒரு நெஞ்சத்தின் அவலம். [2]. "அஞ்சுவ தறியா தமர்துணை தழீஇய, நெஞ்சு நப் பிரிந்தன்று, சேய வம்மா விருவா மிடையே" என்கிறது பிரிவாற் பேதுறும் மற்றொரு உள்ளம்.

பொருள்வயிற் பிரிந்த தலைவன் அவலம் இங்ஙனமாகத் தலைவன் பிரிவால் தலைவியுறும் அவலமோ சொல்லும் தரத்ததன்று. எப்படி? 3. "யாங்கறிந் தனர்கொல் தோழி, அருஞ்சுர வைப்பிற் கானம், பிரிந்துசேண் உறைதல் வல்லு வோரே" என அலமந்து தேய்வாள் ஒருத்தி. 4. "ஆர்கலி எற்றேடு கார்தலை மணந்த, கொல்லைப் புனத்த முல்லை மென்கொடி, எயிறென முகைக்கு நாடற்குத் துயிறுறந் தனவாற் றேழியென் கண்ணே" என வாடி வதங்குவாள் மற்றொருத்தி.

---

1. குறுந்தொகை; பாடல் எண் : 131
2. குறுந்தொகை; பாடல் எண் : 237
3. குறுந்தொகை ; பாடல் எண் :154
4. குறுந்தொகை ; பாடல் எண் :186

இவ்வாறு பிரிவுற்ற தலைவனும் தலைவியும் தாங்கரும் துயர் கொண்டு அலமரும் கதைகளைச் செந்தமிழ் இலக்கியங்களில் மிகுதியும் காணலாம். ஆனல், வறுமை எவ்வளவுதான் வாட்டிக் கசக்கிப் பிழிவ- தாயினும் பிரிவென்பதைக் கனவிலும் நினையாது மகன்றிற் புணர்ச்சி போல வாழ்ந்து சிறந்தார் மிகச் சிலரே. அவருள் தலைமையாளராகச் சங்கச் சான்றோர் ஒருவர் காணப்படுகிறர். அவரே சிறைக்குடி ஆந்தையார் என்னும் செந்நாப் புலவர். அவரைப் பற்றி அறிதற்குப் புறச்சான்றுகள் யாதொன்றும் இல்லை. அகச்சான்றுகளே உண்டு. அவை குறுந்தொகையில் எட்டும் நற்றிணையில் ஒன்றுமாகக் காணக்- கிடக்கின்றன. அவை கொண்டு அவர்தம் வாழ்வியலை ஈண்டுக் காண்போம்.

ஒருமுறை, சிறைக்குடி ஆந்தையாரின் இல்வாழ்க்கை வறுமை யின் வாய்ப்படுகிறது. பொருளின இன்றியமையாமையை அவர் உணர்கிறர். உணரவே, பொருள்வயிற் பிரிய அவருள்ளமும் விழை வதாயிற்று. ஆனல், ஆந்தையாரின் இல்லக் கிழத்தியோ "வல்வரவு வாழ்வார்க் குரை" என்னும் பெரும்பண்பினள். ஆதலின் பொருள் கடைக் கூட்டிய நெஞ்சினை நோக்கிப் புலவர் பேசுந்திறன் காண்க.

"என்நெஞ்சே! நீ வாழ்க! தலைவியுடன் தங்கிவிட்டால் பொருள் பெறுவது முடியாது; பொருள் பொருட்டுப் பிரிந்தால் புணர்ச்சியோ இலலாததாகும். ஆதலின் இவ்விரண்டில் நன்று ஒன்றினைத் தேர்ந்து எடுத்திடுக. ஆயினும் பொருளோ நில்லா நெறியது. யானேவெனில் பெருநிதி பெறுவதாயினும் அதனைச் சிறிதும் விரும்பேனுகித் தலைவிபாலே தங்குவேன். இனி அப்பொருள் என்னவாயினும் ஆகுக."

5. "புணரின் புணராது பொருளே பொருள்வயிற்
பிரியின் புணராது புணர்வே யாயிடைச்
சேர்பினுஞ் செல்லா யாயினு நல்லதற்
குரியை வாழியென னெஞ்சே பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியிற் கெடுவ யானே
விழுநீர் வியலகந் தூணி யாக
எழுமா ணளக்கும் விழுநெதி பெறினுங்
கனங்குழைக் கமர்த்த சேயரி மழைக்கண்
அமர்ந்தினிது நோக்கமொடு செகுத்தனன்
எனைய ஆகுக வாழிய பொருளே."

---

5. நற்றிணை; பாடல் எண் : 16

ஆந்தையார் கூற்று அறிந்து அவர் கிழத்தி "தலைவர் பிரிவார் போலும்" என மிகவும் வருந்துவாள் ஆயினள். "மனையுறை மகளிர்க் காடவர் உயிரென தலைவரே முன்னுரைத்தார்; ஆதலின் அவர் பிரிவாராயின் நான் வாழேன்" எனத்துயர் கொண்டாள். இனிக் கற்புடைப் பெண்டிர்க்குக் கணவன் உள்ள இடமே வாழ்விடம் என்பது சான்றோர் கொள்கையாதலின் தலைவன் பொருள்வயிற் பிரியின் தானும் உடன்போவதென வாடியும் ஊடியும் நின்றாள்.

மனைவியின் எண்ணத்தைக் குறிப்பால் உணர்ந்த ஆந்தையார் மிக வருத்தம் கொண்டு தம்மொடு தாமே பேசுவாராகி "வேட்டையை மேற்கொண்ட செந்நாய் தோண்டி உண்டு எஞ்சிய மலர்கள் மூடிய அழுகலுற்ற நீரைத் தலைவி எம்முடன் சேர்ந்துண்ண வருவாளாயின், அந்தோ! எம் நெஞ்சில் நிலைபெற்ற அவள் மிக்க இரக்கத்திற்கு உரியள்" என உள்ளம் உடைந்து உரைப்பார்.

6. வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சிற்
குளவி மொய்த்த அழுகற் சின்னீர்
வளையுடைக் கையள் எம்மொ டுணீஇயர்
வருகதில் லம்ம தானே
அளியளோ அளியளெம் நெஞ்சமர்ந் தோளே"

தலைவியின் ஊடற்கும் வாடற்கும் தாம் உள்ளத்தளவேனும் பிரிவினை எண்ணியதே காரணியமென ஆந்தையார் தெளிந்தார். தெளிந்து தலைவியின் ஊடலைத் தீர்ப்பாராகி அவள் கூந்தலைத் தொட்டு, தோளும் நுதலும் தடவி 7. "நீபூப்பெய்திய மூன்று நாட்களும் உன்னைப் பிரிவது ஓராண்டுக் காலம் பிரிந்தாற் போலாகின்ற எனக்குப் பிரிவென்பதுஎப்படி நேரும்? 'இது காரணமாக நீ இறப்பின் என்னு-யிரும் உடன் போவதாக' என்றும், 'நாமிருவரும் சேர்ந்து வாழாது பிரிந்து ஒருவராக வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே நலம் என்றும்' கூறுமாறு காண்க"

8. பூவிடைப் படினும் யாண்டுகழிந் தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொ
டுடனுயிர் போகுக தில்ல கடனறிந்
திருவே மாகிய வுலகத்
தொருவே மாகிய புன்மைநாம் முயற்கே

---

6. குறுந்தொகை; பாடல் எண் : 56
7. நற்றிணைக்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை
8. குறுந்தொகை; பாடல் எண்: 57

ஆந்தையார் உள்ளக்கிடக்கையை அறிந்த அவர்தம் கிழத்தியின் உள்ளம் ஒருவாறு ஊடல் தணிகிறது. அவள் நகைமுகம் காட்டி நாயகனின் நற்ருள் தொழுகிருள். தலைவியின் உள்ளத்திறம் கண்டு ஆந்தையார் பின்னும் தம்மனத்தை வெளிப்படத் திறந்து காட்டும் வண்ணம் கண்டு மகிழ்க.

''நெஞ்சே! காந்தள் மலரையும் முல்லைப் பூக்களையும் குவளை மலர்களோடு கலந்து தொகுத்தலின் மாட்சிமைப்பட்ட மாலையைப் போல நல்ல மணத்தையுடைய தலைவியது மேனி தளிரினும் மென்மையும் வண்ணமும் பொருந்தியது; தழுவுதற்கும் இனியது" என்றும்

9. கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையொ டிடைப்பட விரைஇ
ஐதுதொடை மாண்ட கோதை போல
நறிய நல்லோன் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கும் இனிதே

''தலைவி, தழுவலில் விரைவினள்; பெரு வனப்பினள்; குவி மென் முலையள்; கொடி போலும் கூந்தலினள்; கறவை காண் கன்றனைய மெலிந்த நோக்கினள்; ஆதலின் யான் எவ்வாறு அவளை மறந்திருப்பேன்" என்றும்

10. கவவுக் கடுங்குரையள் காமர் வனப்பினள்
குவவுமென் முலையள் கொடிக்கூந் தலளே
யாங்குமறந் தமைகோ யானே ஞாங்கர்க்
கடுஞ்சுரை நல்லா னடுங்குதலைக் குழவி
தாய்காண் விருப்பி னன்ன
சாஅய்நோக் கினளே மாஅ யோளே

''தலைவி, நறுமணமும் குளிர்ச்சியும் உடையவள்; தெப்பத்தைப் போன்ற அவளது பருத்த தோள்களைப் பற்றுந் தோறும் பிரியகில்லேன்; பிரியின் உயிர் வாழேன்" என்றும் பலபடப் பாராட்டுவார்.

......... ......... ......... .........

---

9. குறுந்தொகை; பாடல் எண் : 62

10. குறுந்தொகை; பாடல் எண் : 132

11. நறுந்தண் ணியளே நன்மா மேனி
புனற்புணை அன்ன சாயிழைப் பணைத்தோள்
மணத்தலுந் தணத்தலும் இலமே
பிரியின் வாழ்தல் அதனினும் இலமே

ஆந்தையார் பாராட்டுக் கேட்ட தலைவி பேருவகை கொள்கிருள். அவளது உள்ளமும் உடலுறுப்புக்களும் பூரித்து நிற்கின்றன. அவள் உவகையின் உச்ச நிலையில் இருந்தாள். அஃது அறிந்த ஆந்தையார் தம் உள்ளக்கருத்துக்கள் யாவற்றையும் அவளிடம் ஒருசேரக் கொட்டித் தீர்ப்பாராயினர். என்னை? அவர் பாட்டானே அவரை அறிந்து கொள்ளுங்கள்.

''தலைவியே! நான் உன்னைப் பிரிவேன் என்று வருந்திணை யாயின் நான் அறிந்ததைச் சொல்வேன் கேள்: மலையில் தொங்கிய யைப் பெறுதல் பொருட்டுப் பழைய ஏணியில் அறியாது ஏறிய மடையன் போல இந்த உலகம் பொருளுக்காக ஏமாந்தது; ஆனல், நான் என்னுயிர் இருக்கும் வரை உன்னைப் பிரிய மாட்டேன். இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்'' என்றும்

12. ...........ஒண்ணுத லோயே
நொந்தனை யாயின் கண்டது மொழிவல்
பெருந்தேன் கண்படு வரையின் முதுமால்
பறியா தேறிய மடவோன் போல
ஏமாந் தன்றிவ் வுலகம்
நாமுளே மாகப் பிரியலன் றெளிமே

''நீ குவளை மணக்கும் கூந்தலையும் ஆம்பல் நாறும் வாயினை யும் தாமரைப் பூந்தாது போன்ற தேமலையும் உடைய மாமை நிறம் உடையாய். உன்னைப் பிரிவேன் என்று எண்ணி அஞ்சாதே என்ற சொல் கேட்டு அஞ்சாதே. நான் உன் அன்பினைக் கடல் சூழ்ந்த இவ்வுலகம் பெற்றுலும் விட்டு விடமாட்டேன்'' என்றும் கல்லும் கரைந்துருக எடுத்துரைப்பார்.

---

11. குறுந்தொகை; பாடல்எண்: 168
12. குறுந்தொகை; பாடல்எண் :: 273

13. குவளை நாறுங் குவையிருங் கூந்தல்
ஆம்பல் நாறுந் தேம்பொதி துவர்வாய்க்
குண்டுநீர்த் தாமரைக் கொங்கி னன்ன
நுண்பஃ றித்தி மாஅ யோயே
நீயே, அஞ்ச லென்றவென் சொல்லஞ் சலையே
யானே, குறுங்கா லன்னங் குவவுமணற் சேக்கும்
கடல்சூழ் மண்டிலம் பெறினும்
விடல்சூழ் அலனு னின்னுடை நட்பே

தலைவனின் அளவிடற்கு அரிய உள்ளத்து அன்பை அவன் வாயால் அறிந்த தலைவியின் உள்ளம் நெக்குருகுகிறது. அவள் மிகவும் பெருமிதம் அடைகிருள். அவ்வளவில், தலைவனைப் பெரிதாய்ப் பேணித் தன்னையே அவனிடம் பின்னும கொடுத்து அவன் தாளினைப் பற்றித் தலைமேல் சுமந்து உவகைக் கண்ணீரை ஆருய்ப் பெருக்கி நின்றிருந்தாள். அவளது பெண்மைப் பண்புகள் அனைத்தும் முன்னிலும் முற்றவும் புகழொளி வீசுகின்றன.

அவளின் அசைவில் ஒழுக்கம் கண்டு ஆந்தையார் உள்ளம் உருகிக கண்ணீர் விட்டுப் பேசுதல் காணுங்கள் : – ‘‘தலைவியானவன் நான் தெப்பத்தின் தலைப்பைக் கொண்டால் தானும் அத்தலைப்பைக் கைக்கொள்வாள்; நான் தெப்பத்தின் கடைப்பகுதியைப் பிடித்துக் கொண்டால் அவளும் அக்கடைப் பகுதியைக் கொள்வாள். நான் தெப்பத்தைக் கைவிட்டு நீரோடு சென்ருல் அவளும் நீரோடு வருவாள் போலும்’’

14. தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும்
கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும்
புணைகை விட்டுப் புனலோ டொழுகின்
ஆண்டும் வருகுவள் போலும் மாண்ட
மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வரி நுறழுங் கொழுங்கடை மழைக்கட்
டுளிதலைத் தலைஇய தளிரன் னேளே

---

13. குறுந்தொகை ; பாடல் எண்: 300
14. குறுந்தொகை ; பாடல் எண்: 222

இறுதி வரையில், சிறைக்குடி ஆந்தையார் பிரிவே அறியாப் பெருந்தகையர் ஆயினர். வறுமைக்கு அவர் அஞ்சவில்லை. பிரிவால் வாடுவதைக் காட்டிலும் வறுமையால் சாதலைக்கூட அவர் ஏற்க முனைந்தார். ''பொன்னும் பொருளும் வாழ்க்கை அன்று; அன்பும் அறனுமே வாழ்க்கை'' என்று வாழ்ந்து காட்டிய அந்த வண்டமிழ்ப் புலவர் வாழ்க்கை இக்கால மாந்தர்க்கு நேர்வழியைக் காட்டு-வதாக! சங்கச் சான்றோரில் வாழ்வியல் புரட்சிப் பேரறிஞராக விளங்கிய சிறைக்குடி ஆந்தையார் புகழ் என்றென்றும் பூவுலகில் விளங்குவதாக!

## சமூக சீர்திருத்தத்தில் பாரதிதாசன் பணி *

(டாக்டர் ஏ. என். பெருமாள் எம். ஏ., பி எச். டி.,)

'கன்னற் பொருள் தரும் தமிழ்ப் பூங்காட்டில்' தேனுறிஞ்சித் தெவிட்டாத தீந்தமிழ்ப் பாக்கள் பல தந்து தமிழையும் தமிழினத் தையும் ஏற்றமுறச் செய்த புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஒரு சீர் திருத்தச் செம்மலாகும். தமது சமூக சீர்திருத்தப் பணியைக் கவிதை நலம்தோயும் பல இலக்கிய கருவூலங்களாக அவர் படைத்துக்காட்டி யுள்ளார். அவரது கவிதைகளில் ஒரு வீ ர னி ன் உணர்ச்சியையும் வேகத்தையும் காண முடிகிறது.

''கவிதை எனக்கொரு கைவாள்—மார்பில்
கவசம் எனக்கு வாய்மை
புவியில் தீமைகள் வீழ — நான்
போர்செய்யும் ஓர்படை—வீரன்'

என்று கூறும் பாவேந்தரின் கவிமுரசு போர்முரசாக நம்காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

'பழைய மரபுகள் ஓரளவு இருந்து வரப் புதிய இலக்கியங்கள் அந்த மரபுகளை ஒட்டியும் ஒட்டாமலும் காலத்துக்கு ஏற்ப அமைந்து வருதல் உண்டு' என்று உரைக்கும் டாக்டர் வரதராசனின் கருத்துக்கு இணங்க, பாரதிதாசன் பழைமையை ஏற்றுப் புதுமையைப் புகுத்தித் தற்கால சமுதாயத்தைத் தன்னால் இயன்றவரைச் சீர்திருத்த முயல் வதை அவரது கவிதைகள் மூலம் அறிய முடியும். 'பாரதிதாசன் தன்னு டைய புதுமைக் கவிதைகள் மூலம் அண்மையில் கழிந்த காலத்தை எதிர்த்து ஒரு புரட்சியே செய்துள்ளார்' என்று பேராசிரியர் மீனாட்சி சுந்தரம் கூறுகிறார்.

'மரபுநிலை திரிதல் செய்யுட்கில்லை,' 'மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்' என்னும் தொல்காப்பிய நெறிக்குப் பாவேந்தர் பெரிதும் மதிப்புக் கொடுத்துள்ளார் என்பது தெளிவு. ஆனால் அதோடு புதுமையின் செம்மையைச் சீர்கொள்ள அமைத்திருப்பதினால் அவரது கவிதைகள் கால ஓட்டத்தால் அழியாது இலக்கியப் பதிவேட்டில் புதுவண்ணம் பொலிய விளங்கிச் சிறக்கின்றன. அவர் தமிழ் மரபு

என்னும் திரையமைத்துத் தான் வாழ்ந்த சமுதாயத்தைப் பின்னணியாக்கிக் கைக்கொள்ளவேண்டிய சீர்திருத்தக் கருத்துக்களைத் துலக்கிக் காட்டிக் கவிதை முலாம் கொடுத்து இலக்கியப் படத்தை வரைந்துள்ளார். இறவாப் புகழ் ஈட்டித் தமிழர் நெஞ்சங்களில் நிலையான ஓரிடத்தை அவர் பெற்றுள்ளமைக்கு இதுவே காரணமாகும். பழைமையின் படிவு, புதுமையின் தெளிவு, புரட்சியின் வேகம் அனைத்தும் கூடி மறுமலர்ச்சியைக் காணத் துடிப்பதை அவரது இலக்கியங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

பெண்ணின் பெருமை, குடும்ப நலம், வேறுபாடற்ற சமுதாயம் குறைவற்ற வாழ்வு, மூட நம்பிக்கை அகற்றல், சமூகசேவை ஆகிய வற்றை அழகுபடக் கூறியுள்ளார்.

வீட்டுக்கும் அதன் வழியாக நாட்டுக்கும் ஊக்கமும் ஆக்கமும் தேடித் தந்திடும் பெருமை பெண்ணினத்துக்கு உண்டு என்பதைப் பாவேந்தர் பாராட்டுகிறார். பல்வேறு பாடல்களில் பொதிந்துள்ள கருத்துக்களை விரிப்பின் பெருகும். ஆகவே ஒருசிலவற்றைக் காண்போம்.

பெண்ணின் பெருமையைப் புகன்றிடக் ‘குடும்ப விளக்கு’ ஒன்றே போதும். பெண்களின் பெருமையே ‘குடும்ப விளக்கு’.

கவிதைத் தலைவி நகைமுத்து ஒரு குடும்பத் தலைவி. காலையில் துயிலெழுவதிலிருந்து இரவு துயில் கொள்வதுவரை அவளது கடமைகளை அலுப்புச் சலிப்பின்றிச் செய்து குடும்பத்தினர் அனைவருடைய இன்ப வாழ்வுக்கும் துன்பத் தீர்வுக்கும் காரணமாக விளங்கக் கூடியவள். சுறுசுறுப்புடன் காலத்துத் தகும் வேலைகளைக் கவனித்து முடிக்கும் அவளது திறனைக் கவிஞர் கவின் தமிழில் வடித்துக் காட்டுகிறார். கொண்டானைப் பேணித் தன் குழந்தைகளுக்குப்,

‘பாடம் சொல்ல பாவை தொடங்கினாள்
அவள்வாத் திச்சி; அறைவீடு கழகம்’.

பெண்கள் கல்வியறிவு பெற்றிருப்பின் சிறுவர் செம்மைக் கல்வியைப் பால் கலந்த சோறு போன்று அன்புக் கலவையாக அயின்று பயனடைவர் என்பது கவிஞர் காட்டும் உள்ளுறை.

முதியோர் நலம் பேணும் அன்பகத்தையும் பண்பு நலனையும் பெண்ணிடத்தில் கண்டு கவிஞர் களிக்கிறார்.

முதியோரது தேவையறிந்து சேவை செய்யும் பண்புடைய வளாகப் பெண்மணி அமைந்து ஆசியும் அன்பும் பெறுகிருள். 'ஆடிய பம்பரங்கள் அல்லரோ அம்மூத் தோர்கள்?' ஏலாதோர்க்கு ஏற்ற உதவியை ஆற்றுதல் பெண்ணின் கடமை என்பதையும் கவிஞர் அறிவுறுத்துகிருர்.

நாட்டுநலம், நல்லறம், தீமை செய்யாமை அனைத்தும் பெண்ணின் பெருமையுள் அடக்கப்பட்டுக் கவிஞரால்பாராட்டப்படுகிறது. பெண்ணின் பெருமையால் குடும்பம் மகிழ்கிறது. குடும்ப மகிழ்ச்சியால் சமூகம் சிறக்கிறது.

'நின்ருள் சிரித்தாள் நிலே பெயர்ந்தாள் கானத்து
மன்ருடும் மாமயிலாள் வாரீரென அழைத்தாள்
உள்ளம் பூரித்தாள் உயிரோவியங்கள் நிகர்
பிள்ளேகள் வந்தார்கள் பேச்சோடும் பாட்டோடும்'

ஒரு முதியவர் வாயால்,

'இடும்பை தீர்ப்பவள் என் மனே; அவள் என்
குடும்ப விளக்கு; வேறெது கூறுவேன்?'

என்று கூறும் பாவலர், இடும்பை வருதல் இயல்பு என்பதை ஓர்ந்து அது தீர்க்கும் வாயிலாகப் பெண்ணே நல்மனேயாளாகப் படைக்கிருர்.

சீர்மையுடைய சிறந்த குடும்பத்தைக் கட்டிக் காக்கும் பெண்ணே வீட்டில் பூட்டிக் காக்கும் பிற்போக்கைக் கடிந்து கூறப் பாவலர் தயங்கவில்லே. 'சைவம் பரப்பும் சிறு காவியத்தில்' பூங்கோதை என்பாள் பெற்ருேரால் காவல் வைக்கப்படும்போது கொதிப்படைகிருள், வெந்து சீறுகிருள். இதனேக் கவிஞர்,

'குளிர்புனல் ஓடையே நான்
கொதிக்கிறேன் இவ்விடத்தில்
வெளியில் வருவதில்லே.
வீட்டினில் கூட்டுக்குள்ளே
கிளியெனப் போட்டடைத்தார்
கெடுநினேப்புடைய பெற்ருேர்' என்று கூறுவார்.

கல்வியறிவில்லாப் பெண்கள் வாழும் வீடு 'இருண்ட வீடு' என்று பாவேந்தர் உரைக்கிருர்.

'கைம்மை எனக்கூறி - அப்பெருங்
கையினில் கூர்வேலால்
நம்மினப் பெண்குலத்தின் - இதய

நடுவில் பாய்ச்சுகின்றோம். 'என்றுகூறி' கைம்பெண்ணுக்குக் விடுதலை வேண்டும் என்று வற்புறுத்துவார்.

சாதி சமய வேறுபாடுகளில் சிக்கிய சமூகம் நாட்டின் ஒருமைப் பாட்டுணர்வுக்கு ஊனம் விளைவிக்கும் சாபக்கேடாகும். வல்லதொரு நாட்டை வளமையோடு காண ஆவல்கொண்ட கவி மன்னர் இத் தகைய வேறுபாடுகளைக் களைந்து புதியதோர் உலகம் சமைக்க மக்களை வேண்டி நிற்கிறார்.

'சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தங்கி நடைபெற்று வரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்பு போல் அலக்கழிப்போம், பின்னர்
ஒழித்திடுவோம், புதியதோர் உலகம் செய்வோம்.'

சாதி சமயக் கணப்பில் வீழ்ந்து வெந்து அழியாது மக்கள் என்று கூறுகிறார். விடுதலை பெற்றுய்யவேண்டும் என்ற பாவேந்தரின் வேட்கைப் பெருக்குப் 'பாண்டியன் பரிசில்[3] வீரப்பனின் உரைவழி ஊறிப் பாய்வதைக் காணலாம்.

'இருட்டறையில் உள்ளதடா உலகம்; சாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே;
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே;
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?
சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்
சொத்தெல்லாம் தமக்கென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே; இல்லை யாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே யாகும்'

அனைவர்க்கும் விடுதலை வேண்டும். இல்லையாயின் கெட்டொழிதல் வேண்டும். இதுவே கவிஞரது உறுதியான ஆவல்.

கொள்கைப் பிடிப்போடு அசைக்கமுடியாத உறுதிப்பாட்டுடன் சமூகத்தைச் சீர்திருத்தவேண்டும் என்று விரும்புகிறார் கவிஞர்,

'மீளாத மூடப் பழக்கங்கள் மீண்டும் உமை
நாடாதிருப்பதற்கு நான் உங்களை இன்று
சஞ்சீவி பர்வதத்தின் சாரலுக்குக் கூப்பிட்டேன்'

என்று அழைக்கும் பாரதிதாசன்,

'மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவதென்றோ? உயர்வ தென்றோ?' என்றும் வினவுகிறார்,

'இருண்ட வீடு' என்ற கவிதையின் மூலம் மூட நம்பிக்கைகளைக் களைந்தெறிய முனைகிறார். இராகுகாலம், பல்லியின் பாட்டு-கால்இடறுதல், சோதிடம்பார்த்தல் ஆகியவற்றை நம்பி நலமிழக்கும் மாந்தர்களை உருவாக்கி அதனால் அவர்கள் அடையும் இன்னல்களைத் தெளிவுபடுத்தி மக்களைத் திருத்த முயல்கிறார்.

அனைவரும் சமம் என்பதும் அனைவருக்கும் வாழும் வசதி நல்லமுறையில் கிடைக்கவேண்டும் என்பதும் பாரதிதாசனின் எண்ணம். அதன் புலப்பாடாக,

'உண்ண உடுக்க உறைய நுகர ஆம்
மணபொருள் சரிநிகர் மக்கட் பொதுவெனச்
சட்டம் செய்வதாம்' என்று பாடுகிறார்.

'பாண்டியன் பரிசில்' பாமர மக்களை — வருத்தும் நரிக்-கண்ணனின் ஆட்சிக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தித் தன் கருத்தைச் சமதர்மம் நோக்கிச் செலுத்துவதைக் காணலாம்.

'எல்லார்க்கும் எல்லாமென் றிருப்பதான
இடம்நோக்கி நடக்கின்ற திந்தவையம்
கல்லாரைக் காணுங்கால் கல்விநல்காக்
கசடர்க்குத் தூக்குமரம் அங்கேயுண்டாம்.
இல்லாரும் அங்கில்லை பிறன்நலத்தை
எனதென்று தனியொருவன் சொல்லானங்கே
நல்லாரே எல்லாரும் அவ்வையத்தில்
நமக்கென்ன கிழியட்டும் பழம்பஞ்சாங்கம்'.

மிக மிகத் தெளிவாகப் பாரதிதாசனது சமதர்ம சமுதாய அமைப்பு நோக்கம் இவ்வரிகளில் வெளியிடப்படுகிறது.

'சாதி உயர் வென்றும் தனத்தில் உயர்வென்றும்
போதாக் குறைக்குப் பொதுத்தொழி லாளர்சமூகம்
மெத்த இழிவென்றும் மிகப்பெரும் பாலோரை எல்லாம்
கத்திமுனை காட்டிக் காலமெல்லாம் ஏய்த்துவரும்
பாவிகளைத் திருத்தப் பாவலனே நாமிருவர்
ஆவிகளை யேனும் அர்ப்பணம் செய்வோம்' என்னும்

போது சாதி, மதமற்ற சமுதாய அமைப்பைக் கவிஞர் காண விரும்புதல் தெளிவு.

புறக்கண்களால் விண்மீன்களைக் கண்டதும் கவிஞர் அகக்கண்களால் உழைப்பவரை வருத்தும் செல்வரைக் கண்டு உள்ளம் வெதும்பித் துடிக்கிறார். இரண்டு காட்சிகளையும் இணைத்து 'அழகின் சிரிப்பில்' பாடுகிறார்.

'மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர் செல்வராம் இதைத்தன்
கண்மீதில் பகலி லெல்லாம்
கண்டுகண்டு அந்திக் குப்பின்
விண்மீனாய்க் கொப்பளித்த
விரிவானம் பாராய் தம்பி'

தொழிலாளர் படும் வேதனையைக் கண்டு கவிஞர் படும் பாட்டைப் பாரீர்.

தனிமனிதன் சமூகத்திற்கு உதவவேண்டிய நிலையைப் பல இடங்களில் சுட்டிக் காட்டக் கவிஞர் தவறவில்லை. 'பிசிராந்தையார்' நாடகத்தின் துணையுடன் அதைக் காண முயல்வோம். ஒரு காட்சியில் கொடுங்காற்று வீசுகிறது. பேய்மழை கொட்டுகிறது. மக்கள் பெரும் அவதிப்படுகிறார்கள். அதைக் காண்கிறார் பிசிராந்தையார். தன் கடமை இன்னதென்பதை உணர்கிறார். உடனே தனது முதுமையும் தள்ளாமையும் பின்னிட, ஊக்கமும் கடமை உணர்வும் முன்னிடத் துள்ளி எழுந்து வேண்டிய உதவிகளைச் செய்து மக்களைக் காப்பாற்றுகிறார். கொலை வழக்கு ஒன்றில் நாடு நிலைபிறழாது. உண்மையைக் காண உதவுகிறார். ஆட்சிக்கு எதிரான சூழ்ச்சியை உடைத்து எறிகிறார்.

மக்களின் அல்லல் போக்க, அரசின் நெறி காக்க, நல்லாட்சி நின்று நிலவ, ஆவன முயலல் அனைவர் கடனாகும் என்பதைப் பிசிராந்தையாரின் செயல்கள் மூலம் நாம் கற்று அறியவேண்டும்.

சமூகம் சீர்திருந்திச் சமதர்மம் மலரவேண்டும் என்ற கவிஞரின் ஆவலை 'வெற்றிமுரசு கொட்டும் வீரத்தாய்' என்னும் நாடகத்தின் இறுதியில் மிகத் தெளிவாகப் பாவேந்தர் விளக்குகிறார்.

'எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும் உடைமைஎல்லாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக
எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக
எல்லார்க்கும் மற்றுள்ள செல்வர்க்கும் நாட்டுடைமை
வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக
இல்லார்க்கும் நல்ல நுதல்மாதர் எல்லார்க்கும்
விடுதலையாம் என்றே மணிமுரசம் ஆர்ப்பீரே'

முரசு முழக்கத்துடன் வீராவேசங் கொண்டு தன் கருத்தைக் கூறி முடிக்கிறார்.

குடும்பம் இன்பப்பூங்காவாக மாறப் பெண்குலம் விடுதலையடையவேண்டும். மக்கள் சமூகம் ஒன்றி வாழச் சாதி, சமயப் பூசல்கள் மங்கி மறைய வேண்டும். சமூகம் சீர்பெற்றுச் சிறக்க அனைவர்க்கும் தேவையானவை எல்லாம் கிடைக்க வழி செய்யவேண்டும். பொருளாதார ஏற்றத் தாழ்வு நீங்கி மூட நம்பிக்கை ஒழிந்து அறநிலை ஓங்கி எங்கும் இன்பம் நிலவவேண்டும். அடுத்தார்க்கு உதவும் பண்பு பரவ வேண்டும். அவ்வாறாயின் மக்கள் சமூகம் மலர்ச்சியுறும். நாடு நலம் பெற்றுத் திகழும். மக்கள்குலம் மகிழ்ச்சியோடு பொலியும்.

பாவேந்தரின் வழிநின்று சமூகம் சீர்திருத்தம் காணின், மனிதன் அனைத்து நலங்களையும் சீர்மையுடன் பெற்று உயர்வான் என்பது உறுதி. பாரதிதாசன் பணிசிறக்க வாழ்த்துக்கள்.

## "தூங்கு" எனும் திராவிடச் சொல்*

கோ. சுப்பையா, M.A,.Phd.,
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
மைசூர்—570006.

திராவிட மொழிகளின் வேர்ச்சொற்கள் அகராதியில்[1] "தூங்கு" எனும் பொருள் குறித்து நான்கு தொகுப்பெண்கள் [Entries] காணப்படுகின்றன. அவை தொகுப்பெண் 606; தொகுப்பெண் 2693; தொகுப்பெண் 2777 (a) & (b); தொகுப்பெண் 1582 ஆகும். வடிவமைப்பு(form), பொருண்மை(Meaning) ஆகியவற்றின் அடிப்படையில் தொகுப்பெண் 2777(a) யில் காணும் இணைச்சொற்கள் [Cognates] தொகுப்பெண் 2693-ல் காணும் இணைச்சொற்களுடன் சேர்த்து ஆராயப் பெறுகின்றன. தொகுப்பெண் 2693(a), தொகுப்பெண் 2693 (b) என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. தொகுப்பெண் 2693 (a) தொகுப்பெண் 2777(a)யுடனும்; தொகுப்பெண் 2693 (b) தொகுப்பெண் 2777(b)யுடனும் இணைகின்றன.

திராவிட மொழிகளில் சகரம் ககரமாதல் (Velarisation) எனும் கொள்கை முறையினை (theory) எற்றுக்கொள்ளும்போது' தொகுப்பெண் 1582ஐ தொகுப்பெண் 606உடன் இணைந்து கொள்ள நேர்கிறது.

சில இணைச் சொற்கள் பொருண்மை விரிவாக்கத்தால் (Semantic Extention) பல பொருள்களைப் பெற்றுவிடுகின்றன. தொல் சொல்லின் (Proto-form) தொல் பொருளை (Proto - Meaning)க் காணும் நோக்கமும் இவண் இடம் பெறுகிறது. இதனால் தொல்

---

1 திராவிட மொழிகளின் வேர்ச்சொற்கள் அகராதி = Dravidian Etymological Dictionary and Supplement—T.Burrow & M. B. Emeneau, Oxford University Press, London.

* இக்கட்டுரையின் ஆங்கிலப்படிவம் (English Version) கடந்த ஜூன் (1977) மாதம் பெங்களூரில் நடைபெற்ற திராவிட மொழிகளின் கருத்தரங்கில் (Seminar of the International Dravidian Linguistics Association) படிக்கப்பெற்றது.

திராவிடத்தில் (Proto-Dravidian) பொருண்மைக் கிளை வட்டார வழக்கு ( Semantico - Dialectousage ) இருந்திருக்கலாம் எனும் கருத்து எழுகிறது.

தொகுப்பெண் 2777 (a)–ல் காணும் குயி, மண்டா மொழிகளின் சொற்கள் தொகுப்பெண் 606உடன் இணைக்கப்பட்டுள்ளன; ஏனையவைகள் தொகுப்பெண் 2693 (a)யுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வுக் கட்டுரை மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. (1) தொல் வடிவமைப்பு உருவாக்கல் (Reconstruction of Proto-form); (2) தொல்பொருண்மை உருவாக்கல் (Reconstruction of Proto-Meaning);(3) ககரமாதல் கொள்கை முறையின் அடிப்படையில் தொகுப்பெண் 1582-ல் காணும் இணைச்சொற்களைத் தொகுப்பெண் 606உடன் இணைத்தல்.

### முதல் பிரிவு : தொல் வடிவமைப்பு உருவாக்கல்

(1) தொகுப்பெண் : 606

தமிழ் : உறங்கு 'தூங்கு'; மலையாளம் : உறங்ஙுக 'தூங்கு
கோத்தம் ; ஒர்g 'தூங்கு' ; தொதுவம் : வற் × 'தூங்கு';
கன்னடம் : உறுgஉ ~ ஒறgஉ ~ ஒரங்gஉ 'தூங்கு' வளை';
தெலுங்கு: ஒறgஉ ~ ஒரgஉ 'தூங்கு/சாய்': பார்ஜி: ஒர்g 'சாய்'
கோண்டி: உரங்g; 'வளை'; குயி dருன்g 'ஊசலாடு';
மண்டா: த்ருங்g 'ஊசலாடு/தொங்கு'

குயி, மண்டா மொழிகளின் சொற்களில் தகரம் காணப்படுகிறது. தகரம் சகரத்தின் திரிபு (Reflex) ஆகும். தொல் திராவிட சகரம் ஒரு திராவிடப்பகுதியில்

வெறுமையாகவும் (zero), மற்றொரு திராவிடப்பகுதியில் சகரத்தின் இழப்பை ஈடுபடுத்தியுள்ளது. சில திராவிடப் பகுதிகளில் தகரம் ஏனைய பகுதிகளுக்குப் பரவியிருக்கக்கூடும். [பர்ரோவ். 1968]

வேர்ச்சொல்: * சுற்— ; விகுதி ; *, அங்க்




தொல்திராவிடச்சகரம் தொல்குயி, மண்டாவில் முதலில் தகர மாகத் திரிகிறது. பின்னர் அத்தகரம் d கரமாக [2] க்குயிமொழியில் மாறுதல் அடைகிறது. தொல் திராவிடறகரம் குயி, மண்டாமொழி களில் ரகரமாகத் திரிகிறது. மெய்யொலி முன்னுல் இம்மொழிகளில் தொல்திராவிட றகரம் ரகரமாக மாறுவது இயல்பாகும்.

ஒரு திராவிடப்புகுதியில் தொல்திராவிடச்சகரம் வெறுமையாகவு (zero), மற்ருெரு திராவிடப்பகுதியில் தகரமாகவும் திரிவதை விளக்கு வதற்காகச் சகரம் உருவாக்கப்பெறுகிறது, பொதுவாக சகர இழப்பு தென்திராவிட மொழிக்குடும்பத்தில்தான் ஏற்பட்டுள்ளது. ஆனல் இவ்விழப்பு நடுத்திராவிட மொழியான துளுவையும் தாக்கியுள்ளது, நடுத்திராவிட மொழிகளான பார்ஜியும், கோண்டியும் தென்திராவிட மொழியான தெலுங்கிலிருந்து பெற்றிருக்கலாம்.

---

2. தமிழில் ஒலிப்பு எழுத்துக்கள் (Voiced Sounds) இல்லாததால், இங்கு ஆங்கில எழுத்தையே ஒலிப்பு எழுத்துக்களைக் குறிக்கப் பயன் படுத்தியுள்ளேன்.

**(2) தொகுப்பெண் : 2693 (a)**

தமிழ் : துஞ்சு 'தூங்கு/இற' ; மலையாளம் : துஞ்சுக 'தூங்கு/இற' கன்னடம் : சுந்து 'தூங்கு'; பார்ஜி : துஞ்/சுஞ் 'தூங்கு; கதபா (ஒல்லாரி) : துஞ் 'தூங்கு; கோண்டி: சுன்ஜ் ~ ஹூஸ்கார் ~ உஸ்சுட் ~ ஹூன்ஜாஞ 'தூங்கு' ; பெங்கோ : ஹின்ஜ் 'தூங்கு'/ஜீச் 'கண்மூடு: மண்டா : ஹீன்ஜ 'தூங்கு'/ ஹூஸ்காஞ 'கண்மூடு' ; கொண்டா ; சுன்ஜ் 'தூங்கு'/சூஸ்கண்கு 'தூங்கும்கண்கள்'/ சுஸ் 'தூங்கு' ; குயி : சுன்ஜ் 'தூங்கு'/ சூஸ் 'கண்மூடு'; குவி : ஜூன்ஜ் 'தூங்கு'/ ஹூன்ஜலி 'படு'.

*சூம்*/சும் (வேர்ச்சொற்கள்) தொல்வடிவமைப்பாக உருவாக்கப் பெற்றுள்ளன. *—ச் தொல் திராவிட விகுதியாக உருவாக்கப் பெற்றுள்ளது. பார்ஜி மொழியில் சகரமும் தகரமும் உள்ள சொற்கள் காணப்படுகின்றன. அவை நம் உருவாக்கத்திற்குத் தக்க சான்றுகளாகக் காணப்படுகின்றன. கன்னட மொழியைத் தவிர ஏனைய தென் திராவிட மொழிகள் எல்லாம் (தென் திராவிடம் - Iஐச் சார்ந்தவை) தகரத்தைக் கொண்டுள்ளன. தென் திராவிடம் IIஐச் சார்ந்த மொழிகளான கொண்டா, குவி, குயி, பெங்கோ, மண்டா ஆகிய மொழிகளில் ஸகரம், ஹகரம் கொண்ட சொற்கள் காணப்படுகின்றன. ஸகரமும் ஹகரமும் தொல் திராவிடச் சகரத்தின் திரிபுகளாகும்.

தொகுப்பெண் : 2693 (b)

முன்னர்க் கூறியபடித் தொகுப்பெண் 2777 (b) தொகுப்பெண் 2693 (b) யுடன் இணைக்கப்பெற்றுள்ளது.

தமிழ் : துயில் 'தூங்கு'/ துயில் 'ஊசலாடு'; மலையாளம் ; துயில் 'தூங்கு'; தொதுவம் : தூஸ் 'தூங்கு' ; கன்னடம் : சுசில் 'விடி', துளு : தூலுனி 'தூங்கு'/ சுச்சாலு 'ஊசலாடு'; தெலுங்கு 'தூலு' 'மயங்கு'/ 'அசை'/ 'தொங்கு'; கதபா : துய்ங் 'தூங்கு'/துய் ஊசலாடுதல்' ; பிராகூயி : தூலின்ද ~ தூசின்ද 'உட்கார்'.

கன்னட மொழியில் காணும் பொருள் வேறுபாட்டிற்குத் தகுந்த காரணங்கள் ஏதும் கூற இயலவில்லை. துளுமொழியில் லகரத்துடனும், லகரமில்லாமலும் சொற்கள் காணப்படுகின்றன.

அதுமட்டுமல்லாமல் தகரத்துடன் ஒரு சொல்லும், சகரத்துடன் ஒரு சொல்லும் துளுமொழியில் காணப்படுகின்றன. கதபாமொழிச் சொல்லின் ஙகரம் ஒப்புமையாக்கத்தால் (Analogy) வந்திருக்கலாம். தொல்வடிவமைப்பாக * சூய்/* சுய் (வேர்ச்சொற்கள்)-உம், *—ல் (விகுதி)-உம் உருவாக்கப் பெற்றுள்ளன.

(3) தொகுப்பெண்: 2777 (a)

தமிழ்: தூங்கு‘ தூங்கு/ தொங்கு/ ஊசலாடு’’, மலையாளம் ; தூங்ஙக ‘தூங்கு/ தொங்கு/ ஊசலாடு’; கோத்தம்: தூg ‘தொங்கு’/ துgஉட் ‘தூங்கு’; தொதுவம்: தூ× ‘தொங்கு’; கன்னடம்; தூgல தூங்கு‘தூங்கு தொங்கு/ ஊசலாடு’/ ஜூgலிசு ‘தூங்கு’; கோதவம்; தூங்g ‘தொங்கு’/ ஜூங்g ‘ஊசலாடு’; துளு: தூங்gனி ‘தூங்கு/ ஊசலாடு’ /தூங்குனில~ தூgனி ‘தொங்கு’/ தூgடில சூங்கன~ சூங்குனி~ சூங்g ‘தூங்கு’ தெலுங்கு: தூg ‘தொங்கு’/ ஊசலாடு’; கதபா; துங் ‘தூங்கு’; கொண்ட dஊங் ‘தொங்கு’; பெங்கோ: தூங்g ‘தொங்கு’; குயி: dஊங்g ‘தொங்கு ஊசலாடு’: குவி; தூங்gலி~ தூங்g ‘தொங்கு/ஊசலாடு’; கூர்க்கு; துன்gல்,‘கனவு’ மால்தோ;தும்gமெல ‘கனவு’; பிராகூயி: துgh ‘ தூங்கு/ கனவு’, துன்gன் ‘தூங்கு’.

கன்னடம், கோதவம் ஆகிய தென்திராவிடமொழிகளும், நடுத் திராவிடமொழியான துளுவும சகரத்துடன்கூடிய சொல்லையும் தகரத்துடன் கூடிய சொல்லையும் கொணடுள்ளன. இம்மொழிகள் தொல்வடிவமைப்பாக *சூம்/சும் என்று சகரத்துடன்கூடிய சொல்லை உருவாக்கப் பெரிதும் துணைபுரிகின்றன. *-க் தொல்திராவிட விகுதி-யாக(suffix) உருவாக்கப் பெற்றுள்ளது.

## பிரிவு :2 :தொல் பொருண்மை உருவாக்கல்

தொகுப்பெண்: 606-ல் காணும் எல்லா மொழிச்சொற்களும் எவ்வித-மான மாறுபாடில்லாமல் “தூங்கு” எனும் பொருளையே உணர்த்துகின்-றன. குயி, மண்டாமொழிகள் ஒப்புமையாக்கத்தினல் (Analogy)“ஊச லாடு”எனும் பொருளை உருவாக்கியுள்ளன. பார்ஜி, கோண்டி இவ்விரு மொழிகள் பொருளோடு கூடி சொல்லையும் தெலுங்கிலிருந்து பெற்றுள்-ளன, *சூற்—/ *சுற் – (தொ. பெ.605) எனும் தொல்வடிவமைப்பிற்கு

"தூங்கு" எனும் பொருள் தொல் பொருண்மையாக உருவாக்கப் பெற்றுள்ளது.

தொகுப்பெண் 2693 (b)—ல் காணும் கன்னடச் சொல்லும் (சுசில்), பிராகூயிச் சொல்லும் (தூலின்ϱ) பொருள் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவ்விரு மொழிகளில் காணும் பொருண்மை விலக்கிற்குத் (Semntic deviation) தகுந்த சான்றுகள் இல்லை. ஆனல் ஏனைய மொழிச் சொற்கள் எல்லாம் "தூங்கு" எனும் பொருளையே உணர்த்துகின்றன. எனவே தொல் பொருண்மையாக "தூங்கு" உருவாக்கப் பெற்றுள்ளது.

தொகுப்பெண் 2693 (a)—ல் காணும் எல்லா மொழிச்சொற்களும் "தூங்கு" எனும் பொருளையும் அதன் தொடர்புள்ள பொருளையும் தான் உணர்த்துகின்றன. எனவே இத்தொகுப்பெண்ணின் தொல் வடிவமைப்புக்கு "தூங்கு" எனும் பொருளையே தொல்பொருண்மையாக உருவாக்கப்படுகிறது.

தொகுப்பெண் 2777 (a)-ல் உள்ள இணைச்சொற்கள் எல்லாம் பொருள் அடிப்படையில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றன. முதல் பிரிவு "தூங்கு" எனும் பொருளையும் "தொங்கு" எனும் பொருளையும் கொண்டது. இரண்டாம் பிரிவு "தூங்கு" எனும் பொருளை மட்டுமே கொண்டது. மூன்ரும் பிரிவு "தொங்கு" எனும் பொருளை மட்டுமே கொண்டது. தமிழ், மலையாளம், கோதவம், கன்னடம் ஆகிய தென்திராவிடம்— I —ன் மொழிகள் முதல் பிரிவைச் சாரும். கதபா, துளு ஆகிய நடுத்திராவிட மொழிகளும் வடதிராவிட மொழியான பிராகூயி-யும் இரண்டாம் பிரிவைச் சாரும். மூன்ரும் பிரிவில் தென்திராவிடம் — I ன் மொழிகளான கோத்தம், தொதுவம் ஆகியவையும், தென் திராவிடம்—II-ன் மொழிகளான தெலுங்கு, கொண்ட, குயி, குவி, பெங்கோ ஆகியவைகளும் அடங்கும்.

---

(3) கூர்க்கு, மால்தோ ஆகிய வடதிராவிட மொழிகள் "கனவு" எனும் பொருளை உணர்த்துகின்றன. தர்க்க ரீதியில் விவாதித்தால், இப்பொருள் "தூங்கு" எனும் பொருளை முதன் முதலில் பெற்றுப் பின் பொருண்மை விரிவாக்கத்தினல் (Semantic Extention) "கனவு" எனும் பொருளைப் பெற்றுத் "தூங்கு" எனும் பொருளை இழந்திருக்கலாம்.

தர்க்கவிவாதத்தின் அடிப்படையில் ஆராய்வோமானால் 'தூங்கு'-ம் "தொங்கு"-ம் தம்மிடையே நெருங்கிய பொருள் தொடர்பைக் கொண்டிருப்பது விளங்கும். அதாவது இவ்விரு பொருள்களின் பௌதிக கருத்தை நோக்கினால் "செயலற்றமை" [Inactiveness] என்பதைக் குறிக்கும் என்பது தெளிவாகும். எனவே தொகுப்பெண் 2777 (a)—ன் தொல்பொருண்மை "தூங்கு" என்பது தெளிவேயாகும். ஆனால் இப்பொருண்மை தன்னகத்தே "தொங்கு" எனும் பொருளை இரண்டாம் நிலையில் (Secondary Stage) உருவாக்கியுள்ளது. அதுவும் இப்பொருள் விரிவு தென்திராவிட மொழிகளிடையே தான் என்பது அம் மொழிகளின் சொற்களைக் காணும்போது தெளிவாக விளங்குகிறது. இவ்விரண்டாம் நிலைப்பொருள் —"தொங்கு"- தன்னகத்தே "ஊசலாடு" எனும் மூன்றும் நிலைப்பொருளாக (Third Meaning) உருவாக்கியுள்ளது. இம்மூன்று பொருள்களும் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, குயி, குவி, போன்ற மொழிகளில் காணப்படுகின்றன.




எனவே இப்பொருள் வேறுபாடு தொல் கால நிலையில் (Proto stage) "பொருண்மை கிளைவட்டார வழக்கில் இருந்திருக்கக் கூடும் எனும் கூற்று உறுதியாக்கப்படுகிறது. அதாவது இரு பெரும் வட்டார சொற்றலை (Isogloss) கள், ஒரு துணை வட்டாரசொற்றலை

---

(4) பேராசிரியர் கிருட்டின மூர்த்தி அவர்கள் தென் திராவிட மொழிக் குடும்பத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கிறார். தென்திராவிடம்—I எனவும், தென்திராவிடம்—II எனவும் கூறுகிறார். தமிழ், கன்னடம், மலையாளம், கோத்தம், கோதவம், தொதுவம், முதலியன தென்திராவிடம்—Iஐச் சாரும். தெலுங்கு, கொண்ட, குயி, குவி, பெங்கோ, மண்டா போன்றவை தென்திராவிடம்—IIஐச் சார்ந்தவை. துளு நடுத் திராவிடமொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்பது அவர் கருத்து. (1972—ல் அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் துறையில் அவர் ஆற்றிய சிறப்பு சொற்பொழிவு குறிப்பு).

(Minor Isogloss) யுடன் வழக்கில் இருந்திருக்கிறது. இவ்வட்டாம் சொற்றலேகளேக் கீழ்க்காணுமாறு காட்டலாம்.

**வட்டார சொற்றலே—ஒன்று**

**"தூங்கு"**

தமிழ், மலேயாளம், கோத்தம், கன்னடம், கோதவம் (தென்திரா விடம்—I) தெலுங்கு (தென்திரா விடம்—II)

துளு, கதவா பார்ஜி (நடுத் திராவிடம்)

கூர்க்கு, மால்தோ பிராகூயி (வட திராவிடம்)

**வட்டார சொற்றலே—இரண்டு**

**"தொங்கு"**

தமிழ், மலேயாளம், கன்னடம், கோத்தம், தொதுவம், கோதவம் [தென்திராவிடம்—I

தெலுங்கு, கொண்ட, குயி குவி, பெங்கோ [தென் திராவிடம்—II].

**துணேவட்டார சொற்றலே**

**"ஊசலாடு"**

தமிழ், மலேயாளம், கன்னடம் (தென் திராவிடம் -I)

தெலுங்கு, குவி, குயி (தென் திராவிடம்-II)

தென்திராவிடம் - Iஐச் சேர்ந்த கன்னடத்திடம் இருந்து துளு பொருளோடு கூடி சொற்களைப் பெற்று, அவற்றுடன் — 'உனி' எனும் விகுதியைச் சேர்த்து ''தூங்குனி'' என்றும், ''தூஜனி'' என்றும் கொண்டுள்ளது.

தென் திராவிடம் - Iன் மொழிகளான தமிழ், மலையாளம், கோத்தம், கன்னடம்—ஆகியவைகளும்; துளு, கதபா போன்ற நடுத் திராவிட மொழிகளும்; கூர்க்கு, மால்தோ' பிராகூயி ஆகிய வட திராவிட மொழிகளும் ''தூங்கு'' எனும் வட்டார சொற்றலையைச் சாரும்.

தமிழ், மலையாளம், கோத்தம், தொதுவம், கன்னடம், கோதவம் ஆகிய தென்திராவிடம் - Iன் மொழிகளும்; தெலுங்கு, கொண்ட, குயி, குவி, பெங்கோ ஆகிய தென்திராவிடம் IIன் மொழிகளும் ''தொங்கு'' எனும் வட்டாரச் சொற்றலையில் அடங்கும்.

தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய தென்திராவிடம் - Iன் மொழிகளோடு சேர்ந்து, தெலுங்கு, குயி, குவி, ஆகிய தென் திராவிடம் - II ன் மொழிகள் ''ஊசலாடு'' எனும் துணைவட்டார சொற்றலையைக் கொண்டுள்ளன.

தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய இந்நான்கு இலக்கிய மொழிகள் (literary languages) ''தூங்கு'' ''தொங்கு'' ''ஊசலாடு'' எனும் மூன்று வட்டார சொற்றலைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

தெலுங்கு, குயி, குவி, ஆகிய தென்திராவிடம் II ன் மொழிகள் 'தொங்கு'', ''ஊசலாடு'' எனும் இருவட்டாரசொற்களைக் கொண்டுள்ளன.

தென்திராவிடம் I ன் மொழியான கோத்தம் மட்டும் ''தூங்கு'', ''தொங்கு'' எனும் இரு வட்டார சொற்றலைகளைக் கொண்டுள்ளது.

மேலே கூறியவைகளைக் கீழ்க்காணும் படங்களின் மூலம் விளக்கலாம்.

படம்: 1


தொங்கு
தூங்கு
தொங்கு

படம்: 2


தூங்கு
துளு, கதபா (நடு திராவிடம்); குர்க்கு, மால்தோ, பிராகுயி [வடதிராவிடம்]
தூங்கு
தமிழ், மலையாளம், கன்னடம், [தென்திராவிடம் - I]
தொங்கு
தொங்கு

மூன்றும்பிரிவு:—

ககரமாதல் எனும் கொள்கை முறையினை ஏற்றுக்கொண்டால், தொகுப்பெண் 1582 ஐ, தொகுப்பெண் 606 உடன் ஒப்பிட்டுச் சேர்த்துக்கொள்ளலாம்.

தொகுப்பெண் : 606

துளு : கூருனி "தூங்கு"; தெலுங்கு: கூர்கு~கூர் "தூங்கு", பழந்தெலுங்கு: குனுகு "தூங்கு" ; நாய்கி : ஜ்ங்ஜ "தூங்கு" ; பார்ஜி/ கூர்க்"தூங்கு" / ஜஉர்ஜல் "தூக்கம்"; கதபா (ஒல்லாரி): குர்ஜல் "தூங்கு" / கூர்க் "தூங்கு" ; கோண்டி : கூர்கானு "தூங்கு" - கூர்முட் "தூங்கு" ; குவி : கூர்ன்கலி "தூங்கு"; கூர்க்கு : கூஜன "தூங்கு"; மால்தோ: கூஜெ' 'தூங்கு".

*கூர்-/ *குர்- (வேர்ச்சொற்கள்)-ம், *-க் (விகுதி)-ம் தொல்வடி-வமைப்புகளாக உருவாக்கப்பெற்றுள்ளன.

எல்லாமொழிகளும் "தூங்கு" எனும் பொருளையே உணர்த்து-வதால், "தூங்கு" எனும் பொருளே தொல் பொருண்மையாக உருவாக்கப்பெறுகிறது.

தொல்திராவிட * சகரம் ககரமாதலை ஐயமின்றி விளக்கத் தகுந்த சான்றுகள் இன்னும் தேவைப்படுகின்றன.

பேராசிரியர் எமனோவ் அவர்களின் கூற்றை (1961)—*சகரம் தொல்-திராவிட *உ/*ஊ மற்றும் *இ/ஈ முன்னால் நடுத்திராவிடத்தில் ககர-மாகிறது-எல்லாமொழிகளுக்கும் ஏற்றுக்கொண்டால், தொகுப்பெண் 1582-ல் காணும் இணைச்சொற்களைத் தொகுப்பெண் 606 உடன் சேர்த்துக் கொள்ளலாம். இக்கூற்றுக்குச் சான்றாகக் கீழ்க்காணும் தொகுப்பெண்ணைச் சுட்டிக்காட்டலாம்.

தொகுப்பெண்: 1579 -ஐ ஆராய்வோமானால், தமிழ்: சேட்டை "முறம்"; மலையாளம்: சேறுக "புடை" ; கோத்தம்: கேர் "புடை" ; கன்னடம்: கேறு "புடை" ; தெலுங்கு: செருஜஉ "புடை"; கொண்ட: ஸேறி "புடை" ; பார்ஜி: கேற் "புடை" ; கோண்டி: ஸேதி "புடை; நாய்கி: கேd "புடை"; கொலமி: கேd "புடை"; குயி: ஸேஸி 'புடை"; பெங்கோ: ஜேச் "புடை" ; மண்டா: ஹேசி "முறம்"

குவி: ஹேசி "முறம்"; கூர்க்கு: கேஸ்ன "புடை";— மால்தோ: கே தெ "புடை"

*சேற்—/ செற்— (வேர்ச்சொற்கள்) தொல்வடிவமைப்பாகும். தமிழ், மலையாளம், தெலுங்கு, கொண்ட, கோண்டி, குயி, பெங்கோ ஆகிய மொழிகள் சகரத்தையே கொண்டுள்ளன. குவியும் மண்டாவும் சகரத்தின்திரிபான "ஹகரத்தை" க்கொண்டுள்ளன. ஆனால் கோத்தம், கன்னடம், கொலமி, நாய்கி, பார்ஜி, கூர்க்கு, மால்தோ போன்ற மொழிகள் ககரத்தைக்கொண்டுள்ளன. இச்சான்றிலிருந்து ககரமாதல் எல்லாத்திராவிட மொழிகளிலும் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாக அறியலாம்.

உதவிய நூற்கள்:-


1. Burrow. 1968. Collected Papers On Dravidian Linguistics Annamalai University Publication, Annmalai nagar.

2. Burrow. T. & Emeneau, M.B.,1961 Dravidian Etymolocgical Dictionary Oxford university London.

3. ,, 1968. Dravidian Etymological dictionary Supplement, oxford university Press, London.

4. ,, 1972. Darviian Etymological Notes Part - I Journal of American oriental Society Vol : 92, No: 23., July-Sept.

5. ,, ,, 1972. Dravidian Etymological Notes — Part - II, Journal Society Vol : 92, No : 4., Oct - Dec.

6. Subbiah. G. 1972. A Descriptive Analysis of Kota language-unpublished Ph.D. Dissertation submited to Annamalai Univer sity. Annamalai Nagar.

## மேனாட்டு நாகரிகமும் இந்திய நாகரிகமும்

கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்
(நாகர்கோவில்)

தொகுதி 72—பகுதி 2ன் தொடர்ச்சி

இந்தியருடைய போர்க்கருவிகள் அம்பு வாள் ஈட்டி குந்தம் ஆசப்பணம் சக்கரம் பிண்டிபாலம் முசலம் செண்டு வேல் கவண் முதலிய சிலவே. ஏறக்குறைய எழுநூறு ஆண்டுகட்கு முன்னெல்லாம் இந்தியர்க்கு இவையே படைகளாக இருந்தன. எழுநூறு ஆண்டுகட்கு முன்னே இந்தியர்கள் உப்பு பாடாணம் முதலியவற்றைப் பற்றி நன்கறிந்திருந்தனர் எனினும் அவர்கள் வெடி மருந்தைச் செய்தது ஏறக்குறைய ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னரேயாம் என்று தெரிகின்றது. பிற்காலத்துத் தோன்றிய மருத்துவ நூல்களால் வெடியுப்பு கந்தகம் மனோசிலை முதலியவற்றால் இந்தியர் பல்வகை வெடி மருந்துகளைக் கண்டு பிடித்தனர் என்பது அறியப்படுகின்றது. வெடிமருந்துகளின் தோற்றத்தின் பின்னர் இந்தியர் துப்பாக்கிகளைக் கையாளத் தொடங்கினர். போகர் என்னும் சித்தர் காலத்துப் பல்வகை மருந்துப் பொருள்கள் இந்தியாவிலும் சீனாவிலும் கண்டுபிடிக்கப்பட்டன. துப்பாக்கியை முதன்முதற் கண்டுபிடித்தவர்கள் இந்தியர்களே எனவும் அவர்களோடு கூட்டுறவு உற்ற பின்பே மேனாட்டவர் துப்பாக்கியை உண்டுபண்ணத் தொடங்கினர். எனவும் கருதுவதற்கு இடமுண்டு. முந்நூறு ஆண்டுகட்கு முன்னர் மேனாட்டவர்கள் துப்பாக்கிகளைக் கையாண்டதாக வரலாற்று நூல்களால் அறியப்படவில்லை. முற்காலத்தில் மேனாட்டவர்களும் அம்புவாள் முதலியவற்றையே போர்க்கருவிகளாகப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். இரும்பை உருக்குந் தொழிலையும் காந்தத்தைப் பயன்படுத்து முறையையும் இந்த்யர்களே முதன்முதல் அறிந்தனர்.

உலோகங்களைக் கலக்கவும் பிரிக்கவும் உலோகத்தைப் பிறிது ஒன்றாகச் செய்யவும் முதலிற் கற்றுக் கொண்டவர்கள் இந்தியர்களே என்பதற்கு இரசவாத நூல்களே தக்க சான்றுகளாம். உலோகங்கள் தனிப்பொருள்கள் (Elements) அல்ல என்னும் உண்மையை அறிந்தவர்களும் அவர்களே. மேனாட்டவர்கள் அவ்வுண்மையை இப்பொழுது சிறுகச்சிறுக அறிந்துவரத் தலைப்படுகின்றனர். காந்த சக்தி வட.துருவத்தின்கண் உள்ளது என்பதையும் முதலில் அறிந்தவர்கள் இந்தியர்களே.

வடதிசை நோக்கிலிருந்து உண்ணலாகாது என்றும் வடதிசையில் தலைவைத்துத் துயிலலாகாது என்றும் மனைவாயில் வடதிசையில் அமைக்கலாகாதென்றும் இந்தியர் கொள்வது வடதிசைக் காந்தத்தின் அமைதி நோக்கியேயாம். தெய்வவழிபாடு நோன்பு முதலியவை ஆற்றலுடையவையாகையால் அவற்றை வடதிசைப்பால் செய்யத்தகும் என இந்தியர் கொள்வர். பொன்னை ஒளிர்விக்கும் வன்மை காந்தத்துக்கு உண்டு என்பதையும் இந்தியர் அறிந்துள்ளனர். காந்த சக்தியை எதிர்க்கும் எப்பொருளும் ஆற்றல் மிகுந்ததாகும் என்னும் உண்மை இந்தியர்க்குப் பழம்பாடமேயாம். தாவரங்களின் வடவேரையே மணி-மந்திர மருத்துவத் தொழில்கட்குப் பயன்படுத்தல் வேண்டும் என்னும் கொள்கை மேற்கூறியதை வலியுறுத்தும். ஆராயும் பெற்றிமை இல்லாதார்க்கு இவை குருட்டுக் கொள்கைகள் போலத் தோன்றும். காந்தத்தின் கவர்ச்சி வன்மை பற்றிய பலநூல்கள் இந்தியாவில் இருந்தன என்பது மருத்துவ நூல்களாலும் வாத நூல்களாலும் அறியப்படும்.

பாடாணங்களில் இருந்து உலோகத்தைப் பிரித்து எடுக்கும் முறையை இன்னும் மேனாட்டவர் அறிந்து கொள்ளவில்லை. வெள்ளை, தாளகம், சிங்கி, இரசகர்ப்பூரம் முதலிய பாடாணவகைகளை மேனாட்டார் அறிந்து கொள்ளவில்லை. இந்தியர் அறுபத்து நான்குவகைப் பாடா-ணங்களையும் எட்டுவகை உப்புக்களையும் இவற்றின் கலவைகளையும் மூலிகை உப்புக்களையும் கையாண்டனர். மூலிகையுப்பை முதன்முதற் கண்டறிந்தவர் இந்தியரேயாவர்.

மேனாட்டார் மருத்துவவாராய்ச்சியில் மிகப்பிற்காலத்திலேயே முன்னேற்றம் அடைந்தனர். அவர் மருந்துகள் பெரும்பாலும் இரசச்-சரக்குகளே. மூலிகைமருந்துகளில் இன்றும் இந்தியர்களே முற்போக்கு உடையவர்களாயிருக்கின்றனர். மேனாட்டார் மருந்துகளைப் புறக்-கணிக்கச்செய்யுஞ் சிறந்த மருந்துகள் இந்தியருடைய மருந்துகளில் உள. மருந்துச்சிகிற்சையில் மேனாட்டார் இன்றும் இந்தியர்க்குப் பின்னிட்டவர்களே. இரணசிகிற்சைமுறை இந்தியாவில் இருந்ததேனும் பிற்காலத்தில் அழிந்தது. மேனாட்டார் இரணசிகிற்சையில் மிக முன்னேற்றமடைந்துள்ளனர். மருந்துகளைக் குத்தி வைக்கு முறை இந்தியாவில் இருந்ததாகத் தெரியவில்லை.

நரம்புகளை அறுத்து மருந்தேற்றிச் சிகிற்சிக்கு முறை இந்தியாவில் இன்றும் நிகழ்ந்து வருகின்றது. இதனைக் குத்தி வைத்தலின்

தொடக்கப்படி என்று கூறலாம். எனினும், இந்தியாவின் கலைகள் பெரு பாலனவும் பின்னேக்கம் அடைந்ததுடன் மருத்துவக்கலையும் வீழலாயிற்று.

விட சிகிற்சை, வன்ம சிகிற்சை முதலியன இந்தியாவில் உயர் நிலையில் உள்ளன. மந்திரவாயிலாகவும் யோகு முறை வாயிலாகவும் சிகிற்சிக்கும் முறை இந்தியாவிற்கே சிறப்பாக உரியது.

உடலுறுப்பாராய்ச்சியில் இந்தியரும் புகுந்துள்ளனர். உடம்பின் சிறந்த பகுதிகளைப்பற்றிய நுட்பங்கள் மருத்துவநூல்களிற் கூறப் பட்டிருக்கின்றன. இதயத்தில் நின்றும் செல்லும் நுட்பநாடிகளையும் சுழுமுனை நாடியையும் பற்றி மேனாட்டு நூல்கள் யாதும் கூறவில்லை. புருவமத்தியம் உச்சி முதலிய நரம்பின் புணர்ப்பிடங்களைப் பற்றியும் மேனாட்டார் அறிந்தது சிறிதே. தசவாயுக்களின் நிலை வாத பித்த சிலேட்டும நிலைகளைப் பற்றியும் மேனாட்டார் ஆராய்ச்சி ஆழ்ந்து சென்றதின்று. கைந்நாடிகளைப் பரிசோதிக்கும் முறை மேனாட்டார் இந்தியாவில் நின்றும் பெற்றதே என்பது வெட்ட வெளிச்சமேயாம். அந்நாடிகளின் பல்வேறு நடைகளையும் அவற்றுக்கு ஏதுவான நோய்-களையும் இன்னும் மேனாட்டார் அறிந்திலர். அந்நாடிகளின் நுட்ப உணர்ச்சியே இந்தியர் உறுப்பாராய்ச்சியில் (Anotomy) திறமை பெற்றிருந்தமைக்கு மறுக்கொணாத சான்று ஆகும்.

நோய்களின் காரியங்களாக வரும் உறக்கமின்மை (Sleepless ness)முதலியவற்றைத் தனிநோய்களாகக் கொள்வது மேனாட்டு மருத் துவர் இயல்பு. அவற்றின் காரணங்களாகிய நோய்களை ஆய்ந்தறி-தல் இந்திய மருத்துவர் இயல்பு. வாயு முதலிய நோய்களைப் பற்றி மேனாட்டார் சிறிதும் அறியார். இங்ஙனம் பல்வேறு வகையில் மேனாட்டு மருத்துவ முறையும் இந்திய மருத்துவ முறையும் வேறு பட்டு உள்ளன.

பல்வகைத் தொழில்களையும் இயந்திரங்களின் உதவியால் செய்வதே மேனாட்டாருடைய நோக்கமாக உள்ளது. அவர்களது முன்னேற்றத்துக்கு இயந்திரங்கள் பெரிதும் உதவுகின்றன. இந்தி-யர்களைப் போல மரத்திலைகளில் ஆணியாலும் குச்சுக்களாலும் எழுதி வந்த மேனாட்டார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் அச்சியந்-திரங்களின் உதவியால் நூல்களை அச்சடிக்கக் கற்றுக் கொண்டனர். காகிதமும் எழுதுகோலும் மையும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தியர்-கள் மையால் கண்ணடி முதலியவற்றில் எழுதி வந்ததாகத் தெரிகிறது.

ஓலையிலும், தோலிலும், செப்புத்தகட்டிலும், கல்லிலும், சுவரிலும் எழுதுவது இந்தியர்களுக்கு வழக்கமாக இருந்தது. நூல்கள் பெரும்பாலும் ஓலைகளிலும் செப்பேடுகளிலும் எழுதப்பட்டு வந்தன. இறையனுர் களவியலைச் சிவபெருமான் செப்பேடுகளில் எழுதி அளித்தான் என்ற வரலாறு நூல்கள் செப்பேடுகளிலும் எழுதப்படும் வழக்கமுண்டு என்பதைப் புலனுக்கும் என்க.

மேனுட்டார் ஓவியக்கலையைப் பெரிதும் பேணிற்றிலர். நிரம்பாத இரேகையோவியங்கள் இக்காலத்து மிக வெளிவருகின்றன. ஒன்பான் சுவைகளேயும் நிரம்பக்காட்டும் நிறம் பயின்ற ஓவியங்களே உயிருடையவை போல வரைந்து காட்டுவதற்கு இந்தியர்கள் திறமை பெற்றிருந்தனர். மாதர்களும் ஓவியக்கலையில் வல்லுநராக இருந்தனர். சுவர்களிலும பலகைகளிலும் ஆடைகளிலும் கண்ணுடி (பளிங்கு) களிலும் ஓவியங்கள் வரையப் பெற்றன. ஆடைகளில் ஓவியந்தீட்டுவதே பெருவழக்காக இருத்தது. ஆடைகளில் வரையப்பட்டது பற்றியே ஓவியத்துக்குப் படம் என்னும் பெயருண்டாயிற்று. படம் என்னும் சொல் ஆடை என்னும் பொருள் உடையது. ஒருவரை நேர்முகமாக நோக்கு அவரது ஓவியம் வரைய வல்லார் இன்றும் இந்தியாவில் உண்டு. இந்திய ஓவியக்கலை மேனுட்டாரது புகைப்படக் கருவித் தோற்றத்தோடு வீழலாயிற்று. ஓவியத் தொழிலிலும் கருவிகளேக கையாண்டதில் நின்றும மேனுட்டார் கலைகளிலும் மக்களது முயற்சி வருத்தத்தை நீக்கும் நோக்கமுடையர் என்பதை உணரலாகும். படக்காட்சி இயந்திரம் ஒலிபதிகருவி ஒலிவிடுகருவி வானெலிதருகருவி முதலியனவும் மககள் முயற்சியைக் குறைப்பனவும் பொழுதை ஊதியப்படுத்துவனவும் ஆக இருக்கின்றன. இவை இந்தியர்க்குப் புதியனவேயாகும். மேனுட்டாரது இடையருத முயற்சியே இவற்றின் தோற்றத்துக்குக் காரணமாம். முன்னர் இந்தியர்கள் உயிர்நலவாழ்வை நோக்கமாகக் கொண்டு உலகமுயற்சிகளிற் பெரும்பாலனவற்றைப் புறக்கணித்தனர் ஆயினும் அமைதியையும் மகிழ்வையும் பரவுலக வாழ்க்கைச் சிறப்பையும் எய்தினர். இக்காலத்து இந்தியர்கள் உலகியலின் முயல்வதும் பரவியலின் முயல்வதும் இன்றி இருநலமுங் கெட்டுக் கழிவு அடைதல் வருந்தத்தக்கதாம். முன்னேரும் உலகியற் கலைகளேப் புறக்கணித்திலர் என்பதை நாம் உணரல் வேண்டும். அன்னேர் கலைகளின் வழியாகக் கடவுட்பான்மையைக் கண்டவர் ஆவர்.

கொத்துவேலை, புனைதல் (கற்பனை) வனைதல் (உருவம் முதலியன செய்தல்) என்பவற்றில் இந்தியர் எய்தியிருந்த மேன்மைக்கு இக்காலத்தும் உள்ள பல கோயில்களும் மன்றங்களும் மாளிகைகளும் சான்று சாற்றும். மேனாட்டவர் இவற்றையும் இயந்திரவுதவியால் நிகழ்த்த முயன்று வருகின்றனர்.

ஊசி குறடு கண்ணாடி முதலிய கருவிகள் இந்தியர்கள் செய்து வந்தனராயினும் மேனாட்டவரால் அவை சிறந்த வடிவுகளை அடைந்துள்ளன. 'ஊசியொடு குயின்ற தூசு' 'காதற்ற ஊசி' என்னுந்தொடர்கள் ஊசித்தொழில் நிகழ்ச்சிக்குச் சான்றுகளாம்.

நெசவு இயந்திரங்கள், நெல்குற்றும் இயந்திரங்கள், தவுடு அரைக்கும் இயந்திரங்கள், நீர் இறை இயந்திரங்கள், தையல் இயந்திரங்கள், சீனி செய் இயந்திரங்கள் முதலிய எல்லையற்ற இயந்திரங்களும் சேய்மைக்காட்சிக் கண்ணாடி, வடிவு பெருக்கி, பல்வகை விளக்குகள், படைகள், அளவுகோல்கள், வெம்மை, கலவை முதலியவற்றைக் காட்டும் அளவு கருவி, காற்றின் திணிப்புணர்த்து கருவி முதலாக எண்ணற்ற உபகரணங்கள் மேனாட்டாருடைய முயற்சியால் தோன்றி இன்று உலகிற்குப் பெரும் பயன் செய்து வருகின்றன. தம் இடையீடற்ற முயற்சியால் மேனாட்டார் உலகியல்வாழ்வில் தமக்கு இருந்த கீழ்மையின் அளவிற்குப் பன்மடங்கான மேன்மையை விளைத்துக் கொண்டனர். இந்தியர்கள் இதற்கு எதிர்மறையான நிலையை நாடுகின்றனர்.

உலோகங்களிற் கலவை இருப்பின் அதை அறியும் பொருட்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ள (நீர்) அமைதியளவையைக் குறித்து இந்தியர் நன்ருக அறிந்திருந்தனர். இன்றுந் தட்டார் பொன்னணிகலன்களை நீரில் மூழ்கச் செய்து நிறுத்தல் நீர்க்கும் கட்டிப் பொருள்களுக்கும் அளவையில் உண்டாம் தன்மையை அவர் அறிந்திருந்தமைக்குச் சான்று ஆகும். ஆணியிட்டுப் பொன்மாற்று அறிவதும் உரைகல்லால் மாற்றறிவதும் மேனாட்டார் முன்னர் அறிந்திலர்.

ஏறத்தாழ இருநூறு ஆண்டுகட்கு முன்னர் மேனாட்டார் துலாக்கோலைக்கண்டு பிடித்தனர் என்றும் அதன்முன் இந்தியர்கள் அதனை அறிந்திலர் என்றும் பலர் கருதுகின்றனர். இந்தியர்கள் பொதுவாழ்க்கைக்கு உரிய எல்லாக் கருவிகளையும் வேண்டும் அளவில் பயன்படுத்தி வந்தனர் என்னும் உண்மை ஆராய்ந்து அறியப்

படும் வரை அத்தகைய கருத்துக்கள் அவரை விட்டு நீங்கா. அம்மி, உரல் முதலியவற்றுக்கு ஈடாக இயந்திரங்களைக் கண்டு பிடிக்க இந்தியர் வல்லரல்லர் என்பார் பலர். அவற்றுக்கு இயந்திரங்களைக் கண்ட மேனாட்டாரும் மனைகளில் அம்மி உரல் முதலியவற்றையே பயன்படுத்துகின்றனர் என்பதையும் இயந்திரங்களை வீடு தோறும் அமைப்பது அரிது என்பதையும் பேரளவிற் பயன்படுத்துமிடத்தே இயந்திரங்கள் வேண்டப்படும் என்பதையும் அவர்கள் உணரல் வேண்டும். உரல் திரிகை இராட்டு முதலியவற்றை இயந்திரங்கள் என்று கூறுவது இந்தியர் வழக்கு. மக்களுக்குச் சிறந்த உழைப்பைக் கொடுக்கும் இத்தகைய செலவு குறைந்த இயந்திரங்களையே இந்தியர் பெரிதும் விரும்பினர்.

இந்தியர் துலாக்கோலைக் குறித்துச் சரித்திர காலத்துக்கு முன்பே அறிந்திருந்தனர். பண்டைத் தமிழ் நூல்களில் துலாக்கோலைக் குறித்த குறிப்புக்கள் பல காணப்படுகின்றன. 'சமன் செய்து சீர் தூக்குங் கோல்' என்பன காண்க. அம்பி கதி முதலியவற்றின் நடுவை 'ஏண்' என்பர். இவ்வழக்கு கொல்லர் முதலியோரிடத்து இன்றுங் காணப்படுகின்றது. பொருள்களின் நடுவை (மையம்)க் கண்டு செய்ய வேண்டுந் தொழில்கள் பல இந்தியாவில் நிகழ்ந்து வருகின்றன.

பொழுது அறியும் பொருட்டு இந்தியாவில் 'கன்னல்லட்டு' என்பதொரு கருவியைக் கையாண்டு வந்தனர். இக்கருவியால் பொழுது உதித்தது இத்துணை நாழிகையாயிற்று என்பதை அவர்கள் தெரிந்து கொண்டனர். மேனாட்டார் விம்முசுழற்கம்புகளின் ( விம்மியங்களின் ) தொடர்ச்சியாக்கமும் எதிர்மறையியக்கமும் உணர்ந்து பொழுதறிகருவியாகிய கடிகாரத்தைச் செய்தனர். கடிகாரம் சிறந்ததொரு கருவியாக விளங்குகின்றது. பண்டைக்காலத்து மதில்களின்மேல் தாமே எறியும் படைகள் இருந்தன எனக் கூறப்படுவதனால் விம்மியங்களைப் பண்டை இந்தியர்களும் பயன்படுத்தி வந்தனர் எனக் காணலாகும். நட்சத்திரங்களை நோக்கிப் பொழுதறியும் விஞ்சை மேனாட்டார் முன் அறிந்திலர். ஒருவகைக் கண்ணாடிக்குமிழால் பொழுதறியும் முறையையும் மேனாட்டார் கண்டுள்ளனர். நீர்வாயிலாகவும் நிழல்வாயிலாகவும் பொழுதறியும் முறை இந்தியரே முதன்முதற் கண்டதாம்.

நெருப்பைத் தோற்றுவிப்பதற்குச் சிக்கிமுக்கி என்னும் ஒரு வகைக் கருவியை இந்தியர் கையாண்டு வந்தனர். இது வேதகாலத்தில் மிக வழக்கில் இருந்தது. குழிவுடைய ஒருவகைக் கல்லில்பஞ்சு

இட்டு அரணியால் கடைந்து நெருப்பைத் தோற்றுவிக்குமுறை பார்ப் பாரிடை மிக வழங்கி வந்தது என்பதை வேதங்களின் வாயிலாக அறிகிறோம் . பிற்காலத்தில் இந்தியமருத்துவர்கள் முருகு-பாடாணத்தைப் பயன்படுத்தி நெருப்பைத் தோற்றுவித்ததாகத் தெரிகிறது. ஆயினும் அது பெருவழக்காக நிகழ்ந்ததில்லை. மேனாட்டார் அப்பாடாணத்தைப் பயன்படுத்தி நெருப்புக் குச்சிகளை உண்டாக்கினர். 'சோப்பு' க்கு ஈடாக இந்தியர் சவற்காரத்தைப் பயன்படுத்தினர். அன்றியும், உவர் காரம், சுண்ணும்பு என்பன அழுக்கை நீக்கும் பொருள்கள் என்பதை இந்தியர் நன்கு அறிவர்.

வெடியுப்புத்திராவகம் (Nitric acid) முதலிய திராவகங்களையும் இந்தியர் நன்கு உணர்ந்திருந்தனர். பல வகைத் திராவகங்களை இந்தியர் செய்து வந்தனர். 'மகாதிராவகம்' என்பது எல்லா உலோ-கங்களையும் கரையப் பண்ணும் ஆற்றல் உடையது.

புற நோய்களை உண்டாக்குந் தைலங்களையும் (தெறிசிங்கி-களையும்) வெட்டுக்காயங்களைப் பொருத்தும் மருந்தினையும் (சந்தான கரணியையும்) மயக்கம், பைத்தியம், மகிழ்ச்சி, அறிவு முதலியவற்றை உண்டாக்கும் மருந்துகளையும் இந்தியர் அறிந்திருந்தனர். திகைப்பூடு மயக்கத்தையும் ஊமத்து சாதிக்காய் அபினி முதலியன பைத்தியத்-தையும் மல்லிகை முல்லை முதலியன மகிழ்ச்சியையும் சந்தனம் பிரமி முதலியன அறிவையுந் தரும் என்பர்.

உயிர் கொடுக்கும் அமிர்தசஞ்சீவனி என்னும் மூலிகையை இந்தியர் அறிந்திருந்தமைக்கு நூற்சான்றுகள் காணப்படுகின்றன. முகந்தளவிலே சர்த்தி உண்டாகவும் மலம் வெளிப்படவும் செய்யும் மருந்துகளையும் தொட்டளவில் மயக்குறுத்தும் மருந்துகளையும் அவர்கள் அறிந்திருந்தனர். இன்னும், நீரைத் திண்ணிதாக்கல் நெருப்பின் வெம்மையைத் தடுத்தல் பூனை நாய் பாம்பு முதலியவற்றை மயக்கும் மருந்துகளையும் அவர்கள் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். இவைபோலும் அதிசயிக்கத் தக்க மருந்துகள் பல இந்தியரது இரசாயனத்தொழில் வன்மைக்குச்சான்று பகரும்.

(தொடரும்)

# அழகு

கவியரசு. இளங்கம்பன்.

பூவதன் நகையாய் பூவையர் வடிவாய்
புதுமணல் விரிப்பாகி
ஆவதன் கன்றின் அருமுடல் வனப்பாய்
அகவிடும் மயிலாகி
காவதன் தளிரில் காண்புது வளமாய்க்
கவர்ந்திடும் நிலவாய்நற்
பாவதன் உயிராய் பரவிடும் முதலாய்
பரவசம் தருமழகே!

மலையதன் மடியில் மகிழ்ந்தொலி எழுப்பும்
மாண்நடை அருவியதாய்
விலையெதும் இல்லா மணியொளிச் சுடராய்
விளங்கிடும் தனிவியப்பே!
கலையதன் ஊற்றே கற்பனை விரிவே
கனிமத லைநடையே
அலைகடல் மீதில் ஆடிடும் அழகே!
அவனியெலாம் நீயே,

## தேசிங்குராஜன் வரலாறு

பேராசிரியர் சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ.,
கரந்தைத் தமிழ்க் கல்லூரி, தஞ்சை.

### முகப்பு

செஞ்சிகோட்டை பதினேழாம் நூற்றுண்டின் வரலாற்றுச் சிறப்புடைய தமிழகக்கோட்டைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றுகும். செஞ்சி என்ற சொல் நம் நெஞ்சில் இராஜா தேசிங்கினை நினைவுறுத்தும்.

இளமையான வயதிலேயே நற்பண்புகள் அனைத்தையும் பெற்று நல்லாட்சி நடத்தியதோடு, பெருவீரம் படைத்தவனுகவும் விளங்கி வீரனுகவே போர்க்களத்தில் இறந்து புகழ் எய்தியவன், தேசிங்கு. தேசிங்கு ராஜனையும், மோவுத்துக்காரனையும், பாராசாரிக் குதிரையினையும் நினையாதவர் இத்தமிழகத்தில் இருக்கமுடியாது. காலத்தை வென்று நிற்கும் இவர்கள் தமிழக மக்களின் உயிரினும் சிறந்த மானவுணர்வை உணர்த்தி நிற்கின்றனர்.

"சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்து துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்" எனக் கொதித்தெழும் உணர்வினைப் புகட்டி நிற்பது "தேசிங்கு ராஜன் கதை" எனும் நாட்டுப் பாடலாகும்.

### கதை

டில்லி பாதுஷாவிடமிருந்த பாராசாரிக் குதிரையை அடக்க முடியாத ஐம்பத்தாறு தேசத்தரசரோடு செஞ்சியின் தேரணிசிங் தாரணிசிங் எனும் பெயரிய அரச சகோதரரும் ஏழாண்டு காலம் சிறைவாசம் பெறுகின்றனர். தேரணிசிங்கின் பிரிவுக் காலத்தில் அவனுக்குச் செஞ்சியில் பிறந்த தேசிங்கு, பிள்ளைப் பிராயத்திலேயே சிறந்த வீரனுக விளங்கி, அவனது வழிபடு தெய்வமாகிய அரங்க நாதரின் துணையோடு நண்பன் மோவுத்துக்காரன் எனப்படும் முகமத்கானுடன் டில்லிக்குச் சென்று குதிரையை அடக்கித் தந்தையரை மீட்டு, செஞ்சி திரும்பி தன்னுட்சி பெறுகிருன். இருபது வயதளவில் டில்லி பாதுஷாவின் மகளைத் திருமணம் புரிகிருன். ஆற்காட்டு நவாப்பு செஞ்சியின் மீது கப்பம் பெறவேண்டிப் படையெடுத்து வந்தான். அவனை எதிர்த்து அவனேடு பொருது, நண்பன் முகமத்கானும், தானும் போரில் மடி-

கின்றனர். தேசிங்கின் மனைவியான இராணியும் அவனுடன் மாய்ந்து வானுலகம் புகுந்தனள் என்பதே கதை.

கதைப் பாடல் ;

"ஏற்றப் பாட்டிற்கு எதிர்ப்பாட்டில்லை" என்றான் கம்பன். நாட்டுப் பாடல்களின் புகழ் அவ்வளவு உயரியது. கதைப் பாடல்களும் விஞ்சிய சிறப்புடையனவாகும். பாமரர்களுக்கே உரிய கதை இது என்று கூறலாம். சத்தம், துலுக்கன், பகவான், அப்போ, தபால், பேரு, பிரபலம், கூவுறது, பிரியம், சிப்பாய், டாறுடாருய் போன்றன பாமர மொழிக் கூறுகளேயாகும்.

சமயப் பொதுமை ;

பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் தமிழகத்தில் சைவ, வைணவ, சமண, பௌத்த மதங்களோடு கிறித்துவமும் இஸ்லாமியமும் வேகமாகப் பரப்பப்பட்டன. இருப்பினும் தமிழகத்தில் பல்சமயத்தாரும் "தமிழக மக்கள்" என்ற மனப்பான்மையோடு ஒற்றுமையோடு விளங்கினர் என்பதற்கு ஒரு சான்றாகத் திகழ்வதே இராஜா தேசிங்கு கதை.

தேசிங்கு 'அரங்கரை' வழிபடும் அடியானாக, நாமமிட்டுக் கொள்ளும் வழக்கமுடையானாக இருந்தாலும் அவனது உற்ற நண்பனாக இருந்தவன் முகமத்கான் என்னும் இஸ்லாமிய வீரன். முகமத்கான் பிறப்பால் முஸ்லீமாக இருந்தாலும், திருமணத்தில் கங்கணம் கட்டும் மரபோடு இறக்கும்போது கூட அல்லா எனவும் அரிகோவிந்தா எனவும் கூவி இறக்கிறான் என்பதை

"அந்த குண்டு நெற்றியிற்பட்டது மோவுத்துக் காரனுக்கு
அல்லாரே அல்லாரே என்று கீழே விழ்ந்தானும்
அரிகோவிந்தா வென்று சொல்லிக் கீழே விழுந்தானும்"

என்ற வரிகள் உணர்த்தி இறுதியில் மிகச்சிறப்பாக

"வைகுந்த பதவி சேர்ந்தானையா மோவுத்துக்காரனும்" என ஒரு முஸ்லீம் வைகுந்தம் சேர்ந்ததாகக் கூறும் சமயப் பொதுமை சிறப்புடையதாகும்.

டில்லி பாதுஷா முகமதியன் என்பது உறுதி. தேசிங்கோ வைணவன். ஆனல் தேசிங்கின் வீரத்தைப் புகழும் பாதுஷா தன் பெண்ணைத் தேசிங்கிற்கு மணம்முடிக்க விழைகின்ருன். தேசிங்கும் உரிய வயதில் அப்பாதுஷாவின் பெண்ணை மணக்கிருன். பிறப்பால் முஸ்லீம் பெண்ணுயினும் கொழுநன்வீடு புகுந்ததிலிருந்து அவளும் 'இந்து' மத வழிபாடுகளை ஏற்றவளாக விளங்குகின்ருள்.

திருமணம் இந்து இஸ்லாமிய இருமுறைகளும் கலந்த திருமணமாக இருப்பதை "ஆறுமாதமாய்க் கல்யாணம் பண்ணி அறை-யில் வைத்தார்கள் திரையைக் கூட்டி கல்யாணஞ் செய்தார் செஞ்சிக் கோட்டை தனில்
பெண்சாதி முகத்தைப் பார்த்தறியான் புலிக்குட்டி தேசிங்கு"

எனும் பகுதியும்,

இராணி இந்துவாக வழிபாடியற்றத் தொடங்கியதனை

"அரங்கரை நோக்கிப் பூசை செய்தாளாம் ராணியம்மாளும்"

எனுந் தொடரும் வலியுறுத்துகின்றன.

ஆற்காட்டு நவாப்பும் இஸ்லாமியத்தையே சார்ந்தவன். தேசிங்கோ அவனது பகைவன். ஆனல் தேசிங்கு இறந்தவுடன் நவாப்பு தேசிங்கை மடியில் எடுத்துப் புலம்புகின்ருன்.

"நீ ஒருவனிருந்தால் உலகத்தை யாள்வாய் அப்பா தேசிங்கு
நான் பாவியிருந்து பலனென்ன சொல்லும் ஐயா தேசிங்கு......

வாரி எடுத்து மடிமீதில் வைத்தான் நவாப்பு சைதுல்லா
பார்த்தழுது பல்லக்கில் வைத்தான் நவாப்பு சைதுல்லா"
எனக் கூறுகிறது இப்பாடல்:

அத்தோடன்றி, தேசிங்கிற்கும் பாராசாரிக்கும் நினைவுச் சின்னமாகக் 'கோரி'களும கட்டச் சொல்கிருன். தேசிங்கு சங்கராபரணிக் கரையில் இறந்தாலும், உடல் செஞ்சிக்கோட்டைக்குள்ளே எரிக்கப் பட்டிருக்கிறது.

இராணியும் கணவனேடு உடன்கட்டை ஏறி இருக்கிருள். இதனை
"இராஜாவுடனே தீயில் குதித்தாள் இராணியம்மாளும்
தேவ துந்துபி முழங்குதையா செஞ்சிக் கோட்டைக்குள்"

எனும் பகுதி விளக்குகின்றது.

கோங்கு பக்கிரி என்ற 'துலுக்கன்' இமயமலைச் சாரலில் லட்சம் ரிஷிகளோடே பகவானை நோக்கித் தவம் செய்கிறுன். சிவசிவா, அரகரா, கோவிந்தா, மாயவா என்ற பேரொலிகட்கிடையே மந்திர தந்திர மகா வித்தை யறிந்த துலுக்கனும் பாரதவஞ் செய்தான்-எனும் கதையின் தொடக்கச் செய்தி வழிபாட்டியலிலும்கூட இமயமுதல் குமரி வரை இந்து, இஸ்லாமிய ஒருமையினையே குறிக்கின்றது.

டில்லி பாதுஷாவிடமும் ஆற்காட்டு நவாப்பிடமும் பணிபுரிந்த பேராண்மையாளரில் இன்றியமையாதவர்கள் இந்துக்களே — பெரும் பாலும் தென்னகத்தாரே என்பதனையும் இக்கதை நிறுவுகின்றது. டில்லி பாதுஷாவிற்கு ராஜலிங்க பாபு என்பான் முதன் மந்திரியாக வும், அர்க்காரு பாப்பையன் என்பான் ஓலைநாயகமாகவும், அர்க்காரு சின்னையன் என்பான் தலைமை உதவியாளராகவும் இருக் கின்றனர். ஆற்காடடு நவாப்பினிடத்தில் ரங்கநாத பிள்ளை என்பான் தலைமைக் கணக்கனுகவும், தோன்ற மல்லன் என்பான் சேனுபதியா-கவும், பங்காரு நாய்க்கன் என்பான் பெரிய கணக்கனுகவும் இருக் கின்றுர்கள்.

இந்துக்களும், இஸ்லாமியரும் அண்ணன் தம்பி முறையிலே பழகினர் என்பதனை,

''அண்ணுவாடா தம்பிவாடா மோவுத்துக் காரனே
அண்ணுவாடா தம்பிவாடா பங்காரு நாய்க்கா நீ
அண்ணுவாடா தம்பிவாடா ராஜலிங்க பாபு''

என்ற பகுதியால் அறிகிறேம்.

தேசிங்கின் வீர ஆசிரியன் 'சையது சாகிப் என்பவராவர். ''சையது சாகிப்பைச் சலாம் செய்து தாண்டி விழுவார்கள் எனும் பகுதி இந்து - முஸ்லீம் கல்வி ஒற்றுமையினைக் காட்டுகிறது.

கதைப்பாடலின் பிரிவுகள்:

தேசிங்கு ராஜனின் பிறப்பு முதல் இறப்புவரையுள்ள வாழ்க் கையினை முப்பெரும் பிரிவுகளாக வகுத்துரைககிறது இக்கதைப்பாடல். முற்பகுதி தேசிங்கின் பிறப்பும், வளர்ப்பும், குதிரையை அடக்கிச் செஞ் சிக்கு மீளலுமாகும். இடைப்பகுதி நாட்டாட்சியும், வீரமும் ஆகும். இறுதிப்பகுதி அவனது பேராற்றலும் போரும், இறுதியும் ஆகும்.

முதற்பகுதி :

இஃது ஒரு காப்பியத் தொடக்கம் போன்றே விளங்குகின்றது. வாழ்த்தும், வணக்கமும் கொண்டு நூல் தொடங்குகின்றது. விநாயகர், முருகன், சிவன் விஷ்ணு சரஸ்வதி ஆகியோருக்குரிய இறை வணக்கப் பாடல்களைத் தொடர்ந்து அவையடக்கம் கூறப்படுகிறது. நாட்டுச் சிறப்பும் நகர்ச்சிறப்பும் தொடர்ந்து வருகின்றன :

''கதையின் வரலாறு' எனுந் தலைப்பில் இமய மலைச் சாரலில் பன்முனிவருடன் 'துலுக்கன்' ஒருவன் வரமிருப்பதைக் கூறி, பிறகு கதாநாயகன் தேசிங்கின் புகழிற்குக் காரணமாகிய பாராசாரிக் குதிரையின் வரலாறும் கூறப்படுகின்றது. அதுமுதலாகக் கதை நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. 'கோங்கு' எனக் குறிப்பிடப்படும் கொங்கு நாட்டுப் பக்கிரி பாராசாரிக் குதிரையினை இமயமலைச் சாரலி-னின்றும் கொணர்ந்து டில்லி பாதுஷாவிடம் பெருமதிப்பிற்குக் கொடுக்கிருன். அதனை அடக்கி ஏற, பாதுஷா தனக்கடங்கிய ஐம்பத்தாறு தேசத்தரசர்களையும் அழைக்க, அவர்களுடன் சென்ற தேசிங்கின் தந்தை தேரணி சிங்கும், சிற்றப்பன் தாரணி சிங்கும் குதிரையை அடக்காத ஏனைய அரசரோடேயே ஏழாண்டு சிறைவாசமடைகின்றனர். அந்நிலையில் தேசிங்கு பிறந்து, ஆற்றலுடன்வளர்ந்து, தாய் 'ராம்பாயி' யின் அனுமதியுடன் டில்லி சென்று பாராசாரிக் குதிரையினை 'அரங்கனின்' அருளோடு அடக்கித் தந்தையாரை மீட்டு, பாதுஷாவின் சிறப்பினைப் பெற்றுச் செஞ்சி திரும்புகிருன்.

இரண்டாம் பகுதி

தேசிங்கு பட்டம் பெற்றதற்குப் பின், மூன்றும் திங்களில் தாயும் தேசிங்கின் எட்டாம் வயதில் தந்தையும் பரகதியடைய, சிற்றப்பன் தாரணி சிங்கும், தேசிங்கும் பழைய, புதிய செஞ்சிகளை ஆண்டு வரலாயினர். பதினெட்டு வயது நிரம்பிய நிலையில் டில்லி பாதுஷாவின் மகளைத் திருமணம் செய்துகொள்கிருன். இந்நிலையில் டில்லியரசன் ஆற்காட்டு நவாப்பிடம் 'பகுதி' கேட்டனுப்ப, ஆற்காட்டு நவாப்பு பகுதி காட்டாத பாளையங்களில் ஒன்ருன செஞ்சிக்குத் தோன்ற மல்லனைப் படைகளோடு அனுப்பு, தோன்ற மல்லனை வெருளச் செய்து, கப்பம் கட்ட மறுக்கிருன் தேசிங்கு. எனவே நவாப்பின் படை செஞ்சியினை. முற்றுகையிடுகிறது.

மூன்றும் பகுதி

முற்றுகையினைப்பற்றிச் சிற்றப்பனும், குடிமக்களும் அரங்கர் வழிப்பாட்டிலீடுபட்ட தேசிங்கிடம் கூற, தேசிங்கு மோவுத்துக்-காரனுக்குச் செய்தி சொல்லியனுப்புகிறான். கல்யாணம் செய்ய உள்ள முகமத்கான் செய்தியறிந்தவுடன் கங்கணம் கழற்றுது, தாலிகட்டாது செஞ்சிக்கு வருகிறான். தனிப்புகழ் வேண்டிப் போரிட்ட மோவுத்துக்-காரன் பெற்ற வெற்றியினால் கவனமற்றிருந்த போது பகைவனின் குண்டுபட்டு இறந்து விடுகிறான். நண்பனையும் இழந்த நிலையில் வீரமும் வெகுளியும் நிறைந்த தேசிங்கு இராணியின் விடை பெற்றுப் போர் செய்து பலரை வீழ்த்தி இறுதியில் நவாப்பினைக் கொல்ல எத்தனித்த நிலையில் பாராசாரியினை இழந்து, தன் வாளைத் தன் மேலேயே வீசி இறந்துபடுகிறான். இறந்தவனைப் பகைவன் நவாப்பே புகழ, தேசிங்கின் உடல் செஞ்சிக்கோட்டைக்குக் கொணரப்பட்டு அங்கே இராணியும் உடன்கட்டை ஏறிய நிலையில் எரிக்கப்படுகிறது.

கற்பனை வளம் :

"மண்டிகள் போட்டு மலைகளைத் தூக்கி வாரியடிப்பாராம்
மலைகளை ஓங்கிக் குத்தினாரானால் மருந்து புகை கக்கும்
பத்துப் பனைமர முயரங்கிளம்பிப் பல்டி அடிப்பாராம்"

என்பது போன்ற நிகழ்ச்சிகளைப் பற்றிய வர்ணனை அதிகமுள்ள கற்பனைகளே இக்கதை முழுவதும் விரவிக் காணப்படுகின்றன. எனவே தான் இஃது ஒரு நாட்டுப் பாடலுக்கான முழுமை பெறுகின்றது.

நிகழ்ச்சிக் கோவை!

பாராசாரிக் குதிரையின் வரலாறு முதலாகத் தொடங்கும் நிகழ்ச்சி-களில் பாராசாரியினை யாரும் அடக்க முடியாமையும், தேசிங்கு அடக்கி அக்குதிரையையே பரிசாகப் பெற்றமையும், சிறப்புற ஆட்சி புரிந்து, பின் போரில் பாராசாரியுடன் தானும் இறந்து வைகுந்த-மடைதலும் ஆகிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து கூறப்படுகின்றன. டில்லி-யில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பேசுகின்ற போதே கதையாசிரியன் செஞ்சியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் கூறத் தொடங்குவான். நிகழ்ச்சிகள் இற்றுப் போகாமலிருக்க

"செஞ்சியில் நடந்த சேதியெல்லாம் தெரியச் சொல்றேன்
கேள்,,

எனக் கூறிச் செல்வதைக் காணலாம்.

மரபு நிலைகள்—(1) சலாம்:

ஒருவரையொருவர் காணும்போது சலாமும், பதில் சலாமும் செய்தலை

"எதிரிலே வந்து சலாம் செய்தா னிந்தப்பக்கிரியும்
பதில் சலாமும் கொடுத்தானையா ராஜலிங்க பாபு"

என்ற பகுதி தெளிவாக்குகிறது.

(2) குழந்தை பிறத்தலும் 'கணி அறிதலும், தானம் கொடுத்தலும்'

தேசிங்கு பிறந்த நாளிலக்கணம் நன்றாக உள்ளதென்பதையறிந்தவுடன் "சந்தோஷமாகத் தானம் கொடுத்தான் சகல தேசத்தார்க்கும் வண்டியில் சர்க்கரை வைத்து வழங்கினார் வந்த தேசத்தார்க்கும் ஊருபதிகள் பிராமணருக்கு உறுதியாய்த் தான் கொடுத்தார்." பின் "நல்லநாள் கொண்டு தொட்டிலுமிட்டார்
தேசிங்கு பாலனெனப் பேருமிட்டார்"

(3) கங்கணம் கட்டிச் சண்டைக்குப் போனால்.........?',.

மோவுத்துக்காரன் கல்யாண நிலையில் கட்டிய கங்கணத்தோடு சண்டைக்குக் கிளம்புகிறான். அப்போது அவன் தாயும், சையது சாயபும் அவனைத் தடுக்கின்றனர். அப்போது

"சந்தனம் பூசிச் சண்டைக்குப் போனால் ஜல்தி குண்டு பாயும்
கங்கணம் கட்டிச் சண்டைக்குப் போனல் கடுகு குண்டு பாயும்
மஞ்சளுடுத்திச் சண்டைக்குப் போனால் மகனைக் காணமாட்டேன்"

என்கின்றனர். தேசிங்கு கூட

"என்ன காரியம் பண்ணினையடா மோவுத்துக் காரா நீ
கல்யாண உடுப்புக் கட்டியிருக்கிறாய் மோவுத்துக் காரா நீ"

எனத் தடுக்கின்றான்.

(4) நாளும் கோளும்:

போருக்குச் செல்லும் நாள் நன்னாளாக இருக்க வேண்டும். ஆனால் தேசிங்கு தனக்கு ஒவ்வாத நாளில் புறப்படுகிறான். அவனைச் சிற்றப்பன் தாரணிசிங் தடுக்கிறான்.

"என்ன காரியம் பண்ணினையடா குழந்தை தேசிங்கு
நீ பிறந்தது வெள்ளிக் கிழமை மகனே தேசிங்கு
ராணி பிறந்தது வெள்ளிக்கிழமை மகனே தேசிங்கு
உன் குதிரை பிறந்தது வெள்ளிக்கிழமை மகனே தேசிங்கு
உன் சண்டை பிறந்தது வெள்ளிக்கிழமை மகனே தேசிங்கு.
இந்த நாளும் பிறந்தது வெள்ளிக்கிழமை மகனே தேசிங்கு
இன்றைக் கிருந்து நாளைக்குப் போனால் மகனே தேசிங்கு
சண்டை கெலித்து வருவாயேடா மகனே தேசிங்கு"

எனப் பிறந்த நாளில் போருக்குப் புறப்படலாகாது என்கின்றான்.

5. சகுனம் :

சண்டைக்குச் செல்லுமுன் தேசிங்கு அரங்கரை வழிபடச் செல்லுகிறான். அப்போது

"கண்டமாலை தண்டமாலை கருகிப் போயிற்று.........
கண்ணீர் நிறையத் தண்ணீர் சொரியுது ரங்கநாதருக்கு
ஏற்றி வைத்த திருவிளக்காய் கேகிட அவிந்தது".

போன்ற தீச்சகுனங்கள் தேசிங்கின் முடிவை அறிவுறுப்பனவாகக் காட்டப் படுகின்றன.

6. மரபு மீறலைத் தவிர்த்தல் :

தேசிங்கு முஸ்லீம்களோடு நல்லெண்ண நட்பும் பாசமும் உடையவன் தான். ஆனால் முஸ்லீம்கள் 'அரங்கர்' கோயிலுள் நுழைவதை விரும்பாதவனாகவும் விளங்குகின்றான்.

"அரங்கர் கோயிலுள் துலுக்கன் வந்தால் சும்மா இருப்பேனா
டாறு டாருய்க் கிழித்துப் போடுறேன் நவாப்பு பாளையத்தை"

எனும் தேசிங்கின் வீரமொழிகள் புலப்படுத்துகின்றன.

7. குருமொழி :

''ஆறுமாதம் ஆகாதென்று நம்மிட குரு சொன்னூர்
மூன்றுமாதம் ஆச்சுதாடா மகனே தேசிங்கு
இன்னம்-மூன்று மாதம் போக வேணும் மகனே தேசிங்கு''

எனக்கூறும் சிற்றப்பன் தாரணிசிங்கின் மொழிகள் குருமொழியினையும், மனையின் முகத்தைக் கூடப் பாராதிருக்கும் தேசிங்கின் மரபுப் பற்றினை

''திரைக் கப்பாலே வந்து நின்ருள் ராணியம்மாளும்'' எனும் பகுதிகள் புலப்படுத்துகின்றன.

திரையினிப்பால் நின்ற தேசிங்கு, இராணியிடம் விடை பெற்றுப் பாக்கு வெற்றிலை பெறத் திரைக்கப்பால் கையை நீட்ட, கையில் வெற்றிலை பாக்கு வைத்த இராணி அவனது கையை மட்டும் அப்போது முதன் முதலாகக் காணுகின்ருளாதலின்

''கையே இத்தனை அழகாயிருக்குதே என் பிராண நாதா
உம்முக மெத்தனை அழகாயிருக்குமோ என்பிராண நாதா''.

எனப் புலம்புகின்ற இடம் கேட்போர் உள்ளத்தைப் பிணிக்கும் தகையதாகும்.

8. குதிரைவிசனப்படல்

''சாகிருமென்று தெரிந்ததையா பாராசாரிக்கு
கோடுகோடென்று அழுகுதையா பாராசாரியும்''

எனும் பகுதி நிகழப் போவதை வாயில்லாச் சீவன்களும் அறியும் எனும் மரபினை நிலைநாட்டுகிறது.

9. அரச திருஷ்டி :

ஒருவன்மீது 'ராஜ திருஷ்டி' பட்டால் அவனுக்கு அழிவு அண்மையிலுள்ளது என்பது மரபு. மோவுத்துக்காரனின் அழிவும் ராஜ திருஷ்டியினுலேயே ஏற்படுகிறது. சிறுவர்களாகிய தேசிங்கும், மூகமத்கானும் பாராசாரியை அடக்கி விட்டனர். இருவரும் பாதுஷா விடம் பாராட்டுப் பெறும்போது பாதுஷா, ''தேசிங்கின் அருகிலிருக்குமவனைத் திருஷ்டித்துத் தான் பார்த்தான்'' எனக் கதைகாரன் கூறுகிருன்.

முரண்கள் :

பாராசாரிக் குதிரை தேசிங்கால் டில்லியில் அடக்கப்பட்டு, பாதுஷாவால் பரிசளிக்கப்பட்டதாகும். ஆனால் கதையின் பிற்பகுதியில் தேசிங்கு இப்பாராசாரியை விலைகொடுத்து வாங்கினதாக குறிக்கின்றான்.

"பன்னீராயிரம் வராகன் கொடுத்து உன்னை வாங்கினனே
முப்பதினாயிரம் வராகன் தின்றாய் பாராசாரியே
தண்ணீர் வைத்தாலாகாதென்று சாராயம் வைத்தேனே"

தேசிங்கின் இளமை வீரத்தைக் கண்டு பாராட்டிச் சிறைப்பட்ட ஐம்பத்தாறு நாட்டரசர்களையும் விடுவித்த டில்லியரசன் செஞ்சி 'கப்பம்' வேண்டியதில்லை என்பதனை

"என்றைக்குஞ் செஞ்சி தோப்புருப் பணமும் இல்லையென்று சொல்லும்" எனக் கூறுகிறான். ஆனால் அவனே "ஐம்பத்தாறு தேச ராஜாக்களும் பகுதி கட்டுகிறார்களா" என முற்கூற்றிற்கு முரண் பட்டுக் கூறலையும்

"தோப்புருப் பணமும் நிறுவையிருக்குது பழஞ்செஞ்சியிலே பன்னிரண்டு வருஷந் தோப்புருப் பகுதி பணமும கட்டவில்லை" எனும் ராஜலிங்க பாபுவின் மொழியினைப் பாதுஷாவும் ஏற்றுப் பணம் கட்ட ஓலையும்அனுப்புகிறான். அதன்பொருட்டே ஆற்காட்டு நவாப்பும் செஞ்சியின்மீது படையெடுக்க நேரிடுகின்றது.

வரலா

தேசிங்கு ராஜன் கதைப்பாட்டு ஒரு முழுமையான வரலாறாகும். 17-ஆம் நூற்றாண்டில தென்னக வரலாற்றின் ஒரு பகுதியை இது காட்டுகிறது. முகமதியர்களின் ஆளுகையில் தென்னகப் பாளையங்கள் இயங்கி வந்த நிலையில் தென்னக வரலாறு காட்டுகிறது. இந்நூல் தேசிங்கு வாழ்ந்த ஊர், கோட்டை, அரணமனை முதலியனவும் வழிபட்ட ஸ்ரீரங்கநாத கோயிலும். சங்கராபரணி நதியும், அவன் இறந்த பகுதியிலும், குதிரையைப் புதைத்த இடத்திலும், மோவுத் துக்காரன், நீலவேணி ஆகியோரின் இறப்பிடத்தையும் கட்டப்பட்ட 'கோரிகள்' நினைவுச்சின்னங்களாக இன்றும் விளங்கி வருகின்றன.

தேசிங்கின் காலத்தில் செஞ்சியையடுத்த திமிரிக் கோட்டையினை ஷேக் முகம்மது என்பானும் ஆரணிக் கோட்டையினை வேங்கட ராயர் என்பாரும் சேத்துப்பட்டையை ரங்கராவும் திருவண்ணமலையினைச் சுபங்கி துரையும், வாலிக்கோட்டையினை அப்துல் காதரும் மதுரையை மலையாளத்தானும், அரியலூரைப் பெரிய துரையும், ஆச்சி நாயக்கன் பொம்மி நாயக்கன் என்ற பாளையக்காரனும், ஆண்டு வருவதாக இந்நூல் உரைக்கின்றது. இவர்கள் அனைவரும் ஆற்காட்டு நவாப்பின் செஞ்சிப் படையெடுப்பிற்கு உதவியவர்களாவர்.

தேசிங்கின் பககலில் உதவியாக இருந்தவர்கள் பேட்டைச் சிப்பாய் முகமத் கானும், பங்காளித் தன்சிஙகும், சிற்றப்பன் தாரணி சிங்கும், ஜெயராம், கெங்காராம், நத்தர்சிங், லட்சுமணசிங், ராமுதாரி, லட்சுமணதாரி, மானசிங், கிரிபுசிங், தரணிடில்லி உசன் சாயபு ஆகியோராவார்.

போரிடையில் தேசிங்கின் எதிர்ப்பை முறியடிப்பான் வேண்டி ஆற்காட்டு நவாப்பு தாழனூர், மலையனூர் ஏரிகளை வெட்டிச் சங்கரா பரணியாற்றின நீர்ப் பெருககை வெள்ளமாக்குகிருன். இந்நிகழ்ச்சியும் வரலாற்று அடிப்படையுடன் உள்ளது.

கதையின் நோக்கம்:

கதையன் நோக்கம் 'உரிமைப் போராட்டத்தை எழுப்புவதா-கும். செஞ்சியில் தேசிங்கும், பாளையங்கோட்டையில் வீரபாண்டிய-னும், தெற்கத்திய சீமையில் மருது சகோதரர்களும், பூலித்தேவனும் தென்கோடியில் தளவாய் வேலுத்தம்பியுமாக உரிமைப் போராட்டங்களை அந்நியரின் ஆளுகைக்கு எதிராகக் கிளப்பிச் செயற்பட்ட காலத்துக் கருததுரை இப்பாடற்ருெகுதி ஆகும்.

வீரனுகப் பிறந்தவன் எந்நேரத்திலும் தன் இறப்பை வரவேற்பவனுக, பொருட்படுத்தாதவனுக மானமொன்றையே பெரிதெனக் கொண்டு புகழ் ஒன்றனையே இலக்காகக் கொண்டிருக்க வேண்டும் என்பதனையே இக்கதை வெளிப்படுத்துகிறது.

"ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு என்னைப் பெற்ற தாயே
பிறந்த அன்றைக்கே சாவிருக்குது பெற்ற மாதாவே
ரணகளத்தில் செத்தும் போனுல் நல்ல பதவியுண்டு...
மருந்து புகையில் செத்தேனென்ருல் மகா பதவியுண்டு
என்றைக்கும் பேரிருக்கு வேணுமிந்த உலகினிலே
புல்லும் பூமி உள்ள வரைக்கும் பேரெடுக்க வேணும்"

என மோவுத்துக்காரன் மொழிவதையும், தேசிங்கு

> ''இராஜ குலத்தில் நானும் பிறந்தேன் ரேசக் காரனுக
> ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு சிற்றப்ப ராஜாவே
> நான்- முன் வைத்த காலைப் பின் வைப்பேனோ'' என்று

கூறுவதையும் நோக்க இக்கருத்து வன்மை பெறுகிறது.

**தேசிங்கின் வீரமும்-மோவுத்துக்காரனின் ஆற்றலும்:**

போருக்குச் செல்லுமுன் தேசிங்கு சிங்கார மஹாலுக்கு வந்து முதலில் நெற்றியில் திருபண் இட்டபிறகே, காலுக்கு ருத்தினி போட்டு, இடுப்பில் கச்சை இறுக்கி, சரிகையுருமாலை தலையிற்கட்டி மார்புக்குக் கவசம் போட்டு, அங்கியினை மேற் போட்டு, ஐந்து துலாம் எடையுள்ள கத்தியினையும் ஏழுதுலாம் எடையுள்ள பரிசை பாலா வினையும் எடுத்துக்கொண்டு பாராசாரியில் போருக்குச் செல்லுகிறான். அங்கு நவாப் வியூகத்தின் முன்னணி வீரர்களை வென்று பகைவர்களை ஓடியொளியச் செய்கிறான்.

ஆனால் இறுதியில் அவன் சூழ்ச்சிக்கு இலக்காகி முடிவடைகின்றான். நவாப்இருக்கும் யானையினை தேசிங்கு அணுகி மேல் அம்பாரியிலிருக்கும் நவாப்பை வீழ்த்த 'பாலா'வை இழுத்து வீச முயலுகின்றான். இந்நிலையில் யானையின் வயிற்றுப் புறத்தில் பரண்கட்டி மரவெட்டியான் ஒருவன் ஒளிந்திருக்கிறான். பாராசாரி யானையின் முகத்தில் கால் வைத்து உயர்ந்த போது அதன் கால்களை அவன் வெட்டி விடுகிறான். எனவே பாராசாரி கால்களை இழந்து கீழே விழுந்த தன் குதிரையை வெட்டி அதன் துன்பம் போக்கியழுத தேசிங்கு வெறியாவேசத்தோடு போரிட்டு அனைவரையும் வெருட்டி, எதிரி யாரையும் காணாது ''கத்தியை சுழற்றி ஆகாயமெறிந்தான் ராஜா தேசிங்கு மார்பை விரித்து மண்மேல் படுத்தான் ராஜா தேசிங்கு அப்போ-மூன்று சத்தம் போட்டானையா ராஜா தேசிங்கு ஸ்ரீ கிருஷ்ணா! ராமா !! என்று கீழே விழுந்தானாம்.

''நானும் நீயும் புகுந்து வெட்டினால் ராஜா தேசிங்கு உமது பேருண்டாகுமேயன்றி என்பேருண்டாகாது''. எனக் கூறித் தனியாக நவாப்புப் பாளையத்துடன் சண்டையிடுகிறான். மோவுத்துக்காரன் பெரு வீரர்களாகிய சுபங்கி, ஷேக்முகமது, முதலியவர்களையெல்லாம் வென்று உயிர்ப்பிச்சை கொடுத்து, பகைவர்களைக் காணமல், கவனமில்லாமல் வந்த மோவுத்துக்காரனை பதுங்கியிருந்த ஓர் பாளையக்-

காரன் இரண்டு குண்டுகளால் மாய்த்து விடுகிறான். மோவுத்துக்காரனையும் அவன் குதிரை நீலவேணியினையும் ஒருங்கு புதைத்து அதன்மீது நினைவுச் சின்னமாகக் கோரியொன்றினையும் தேசிங்கு கட்டச் சொல்கிறான். இவ்வாறு வீரத்தில் வீழ்ந்த இருநண்பர்களும் வைகுந்தமடைகின்றனர்.

நிறை வாழ்த்து:

''சொன்ன மொழி தவறாத தேசிங்கு ராஜன் சுகமாய் மிக வாழி' என்ற மொழியினால் நண்பனை இழந்தும், பாராசாரியையும் இழந்தும் வாழமாட்டேன் என்று சொன்ன தேசிங்கின் வீரமுடிவு நிலைத்து வாழ்வது பெறப்படுகின்றது. அரங்கரருளால் ஆட்சி சிறக்க விளங்கிய தேசிங்கு அரங்கர் பாதத்தை அடைந்து சிறப்புற்றான் என்பதனைக் கூறும் இக்கதை வாழ்ந்து, வாழும் மக்களுள்ளத்தில் சாதி, சமய பேதங்கடந்த ஒற்றுமையுணர்வையும், தன்மான உணர்வையும், புகழ் பெறும் ஆசையினையும் வளர்த்து வருவதொன்றாகும்.

# மணிவிழா நிகழ்ச்சி

‘என்கடன் பணி செய்து கிடப்பதே’ என்பதைத் தம் உயிர்மூச்சாகக் கொண்டு கடந்த முப்பது ஆண்டு-களாகச் சமூகப்பணியும், மொழித்தொண்டும் புரிந்து வருகிற தமிழ்ச்சங்க உறுப்பினர் திரு. ஆ. ஆண்டியப்-பனார் அவர்களின் மணிவிழா சென்ற ஜூலைத் திங்கள் பதினாறும்நாள் தமிழ்ச்சங்க மாளிகையில் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது.

‘மனித்தப் பிறவியும் வேண்டுவதே’ என்பது தேவாரம். எடுத்த மானுடப் பிறவியினை ஈன்ற மண்ணின் ஆன்ற பெருமைக்கு அர்ப்பணிப்பவர் மிகச்சிலரே. அம் மிகச்சிலருள் தலையாயவர் திரு. ஆண்டியப்பன் அவர்கள். குணமென்னும் குன்றேறி நின்றவர்; சின-மென்னும் சேர்ந்தாரைக் கொல்லி அணுவளவும் தம்பாற் சாராத அன்புச் சீலர்; அருளும் அன்பும் ஒருங்கே இணைந்த உயரிய பண்பாளர்; மாடுமனை மக்கள் சுற்றம் என்று பாராது இடையறாத தமிழ்ப்பணியும் இணையற்ற சமூகத் தொண்டும் புரிந்து வருகின்றவர்.

மாமதுரையில் முகவை மன்னர் பாண்டித்துரைத் தேவரின் நூற்றாண்டுவிழா நடத்துவதற்கும், மலர் வெளியீட்டிற்கும் அருந்தொண்டு புரிந்தவர். நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரால் ‘முக்குல மாமணி’ எனும் பட்டம் சூட்டப்பெற்றவர். தமிழ்ச்சங்கம் பிறர் வயப்பட்டுத் தடம் புரண்டபோது அதனை ஒருநிலைக்குக் கொண்டு வந்த பெருமுயற்சியில் திரு. ஆண்டியப்-பனாரின் தொண்டும் அளப்பரியது.

அன்றைய மணிவிழா நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்ச்சங்கச் செயலருமான திரு. டி. பி. எம். பெரியசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த, தமிழ்நாடு ஜனதா கட்சித் தலைவர் திரு. எஸ். வி. இலட்சுமணன் அவர்கள் பொன்னுடை போர்த்தினர்கள். திரு. ஆண்டியப்பனாரின் தொண்டினைப் பாராட்டி அறிஞர் பெருமக்கள் வாழ்த்துரை வழங்கினர். கிருபானந்த வாரியார், சுத்தானந்த பாரதியார், தேவ-நேயப் பாவாணர் உள்ளிட்ட பேரறிஞர்களின் வாழ்த்துச் செய்திகள் அடங்கிய மணி விழா மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

மணிவிழாக் கண்ட திரு. ஆண்டியப்பனார் அவர்கள் நிலவுலகில் நின்று நிலைத்து நீடு வாழ இறையடிகளை ஏத்தி வணங்குகிறோம்.

# நூல் மதிப்புரை

(i) நூல் : ஓ! அன்றில் பறவைகளே !

ஆசிரியர் : லெ. ச. கந்தசாமி

தூய்மையான அன்புக்கு எடுத்துக்காட்டாக இலக்கியங்களில் உலவும் அன்றில் பறவைகள் எப்போதும் இணைந்து வாழ்வன. பிரிவு நேரின், உயிர் பிரியும் தன்மையன. துன்பத்தின் சாயலைச் சுமந்து வரும் இப்புதினத்தின் தலைப்பே ஆசிரியரின் இலக்கிய நெஞ்சினை வெளிப்படுத்துகிறது.

கல்லூரி மாணவர்களின் விடுதி வாழ்க்கையினை நகைச்சுவையோடு படம் பிடிக்கும் இப்புதினத்தில் வருகின்ற அனைத்துப் பாத்திரங்களிலும் நமது நெஞ்சில் நிறைந்தவர்கள் தங்கம், சேகர் ஆகியோர். தற்கால ஆண்கள் உலகைப் பிரதிபலிக்கின்ற சேகர் தங்கத்தை ஒரு கட்டத்தில் அடிக்கின்றான். கணவனிடம் அடிவாங்கிய மனைவி வருந்துவதாகக் கதையில் வருகிறது. மனைவியை அடித்துவிட்டோமே என்று கணவனை வருத்தமுறச் செய்திருக்கலாம் என்று தோன்றுகிறது. தங்கம் படுகின்ற மனக்கவலையைச் சுட்டிக் காட்டுவதற்குத் தங்கம் தலைகீழாகச் செய்திப் பத்திரிக்கையினைப் பார்ப்பதாகக் குறிப்பிடுகின்ற உத்தி பாராட்டத் தக்கது.

'கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேற்றிசை வாயில் வறியேன் பெயர்கென'

என்று வருவன கண்ணகியின் கையற்ற நெஞ்சினைக் காட்டும் சிலம்பு வரிகள். நல்ல சந்தர்ப்பத்தில் இதனைக் கதையோட்டத்தில் புகுத்தியது நாவலாசிரியரின் இலக்கிய நெஞ்சத்தைக் காட்டுகிறது. கிராமங்களின் அழிவுக்கு அளவு கடந்த மான உணர்ச்சிதான் காரணம் எனும் ஆசிரியரின் கூற்று சிந்திக்கத்தக்கது. காதல் காட்சிகளை மையமாகக் கொண்டு உடலுறவு விரசத்தில் குளித்தெழுகின்ற கதாசிரியர்களுக்கு, படிப்போரின் பாலுணர்வினைத் தூண்டாமலேயே சிறந்த புதினத்தைப் படைக்க முடியும் என்று வழிகாட்டுகின்ற திரு. கந்தசாமிக்கு நமது பாராட்டுகள் உரியன.

(ii) நூல் : வீழ்ந்த மலர்

எழுதியவர் : பழனி இளங்கம்பன்
சித்திரகூடம், பழனி

விலை : 75 காசுகள்.

கேரள மாகவி குமாரன் ஆசானின் வீணா பூ ஒரு மலையாளக் கவிதை நூல். கவியரசு இளங்கம்பன் இதனைத் தழுவல் கவிதையாகச் சிறிய அளவில் வெளியிட்டுள்ளார். செடியில் நின்று நிமிர்ந்து, நிறைமணம் வீசும் மலர்களும், ஒளியிழந்து பொலிவு குன்றி வாடியும் வதங்கியும் சேற்றிலே உதிர்கின்றன. மனித வாழ்வும் அத்தகையதே. மலரினை மையமாக வைத்து வாழ்க்கை நிலையாமையைச் சுட்டும் இக்கவிதைகள் இனியன; எளியன. சொல்லோட்டத்திற்கும், கருத்துச் செறிவிற்கும் பஞ்சமில்லை.

'தூய அந்த மலரினையும்
துடிக்குமிந்த நெஞ்சினையும்
நேயமுடன் ஆக்கிய கை
நீளுலகில் ஒன்றலவோ' என வரும்

பகுதிகள் சிறப்புடையன.

(iii) நூல் : செந்தில் முருகன் சிரிக்கின்றான்

எழுதியவர் : அடியன் மணிவாசகன்
6, வள்ளலார் பொதுநெறி இல்லம்
திருவைகுந்தம்.

விலை : 1 ரூபாய்

திருவருள் நினைப்பால் உந்தப்பெற்றுச் செந்தூர் முருகனை நாடிச் சென்றவர் பைந்தமிழ்ப் பாவலர் சேவற் கொடியோன். செந்திலம்பதியின் அலைவாய்க் காட்சியும், தங்கத்தேர் மாட்சியும் அவர் உள்ளத்தைக் கவர்கின்றன. மாசிப் பெருவிழாவைக் காண்கிறார் கவிஞர். மாணவர், ஆசிரியர், வணிகர், துறவி, வழக்குரைஞர் ஆகிய பலதரப்பட்டோர் வாழ்க்கையில் தத்தமது நலனுக் கென்றே முருகனை வணங்குவதைக் காண்கிறார். ஆனால் பாவலரோ உலகமக்கள் அனைவருக்காக முருகனை வாழ்த்திப் பாடும்போதும் அவன் தண்ணருள்

கிட்டவில்லை. பாறையில் முட்டி மோதிக்கொள்ளும் போது செந்தில் முருகன் சிரிக்கிருன். அருள்கிருன்; உளம் மகிழ்ந்த பாவலர் ஊர் திரும்புகிருர். சந்தக் கவியினை ஒத்த சொல்லோட்டம் சிற்சில இடங்களில் சிறப்புற அமைந்துள்ளது. யாரும் படிக்கக் கூடிய எளிய கவிதை நூல்.

'செந்தமிழ் முருகனைச் சேவியா நாளெலாம்
செத்தநாள் என்பதென் கொள்கையே' என்பது நெஞ்சில்

நிற்கும் பகுதி. கன்னியரைப் பற்றியும், அவர்தம் காதலைப் பற்றியும் வெற்றுக் கவிதை எழுதிக் காலத்தை வீணடிக்காமல், இறையுணர்வுக்கு நம்மை ஈடுபடுத்தும் இக்கவிஞர் பாராட்டுக்கு உரியவர்,

— பழநி. அரங்கசாமி.

# செய்திக் கதிர்

**மத்திய மாநிலத்தில் தமிழ்:**

ஜப்பல்பூரில் இலக்கியப்பணி புரிந்து வருகிற காமத் பிரசாத் பாரதிக்கழகம் தமிழ், வடமொழி, தெலுங்கு, மலையாளம், உருது, குஜராத்தி ஆகிய இந்திய மொழிகளைப் பயிற்றுவிக்கின்றது. இப் பணியினை ஏற்று நடத்துவதற்கு ஜப்பல்பூர் பல்கலைக்கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. தமிழைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள இப்பாரதிக் கழகத்துக்குச் சென்னைமாநில அரசு இந்த ஆண்டு ஐயாயிரம் ரூபாய் நிதி உதவி அளித்துள்ளது. மாநில அரசின் தமிழ் வளர்ச்சி இயக்குநரும் இந்நிதி உதவிக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

**அயல் மொழி இலக்கியங்கள்:**

முன்னாள் உயர்நீதி மன்ற நடுவர் மகராசன் தலைமையில் நான்கு உறுப்பினர்களை உள்ளிட்ட ஓர் அறிஞர் குழுவினைத் தமிழக அரசினர் அமைத்துள்ளனர். தமிழ்மொழியின் தொன்மையான இலக்கியங்களைப் பிற இந்திய மொழிகளிலேயன்றி ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்ப்பதோடு, மிகச்சிறந்த அயல் மொழி இலக்கியங்களைத் தமிழில் அம்மூல நூல்களிலிருந்தே மொழி பெயர்ப்பதும் இக்குழுவின் பணி என்று தெரிகிறது. சில நூல்களை நேரடியாக மொழி பெயர்ப்பதில் சிக்கல் ஏற்படுமானால் அந்தந்த நூல்களின் ஆங்கில மொழியாக்கத்திலிருந்து அவை தமிழுக்குப் பெயர்த் தெழுதப்படும். இதுகாறும் வெளியிடப்பட்டுள்ள மொழி பெயர்ப்புகளின் நூல் அட்டவணையைத் தற்போது ஓர் ஆராய்ச்சி மாணவர் தயாரித்து வருகிறார்.

மொழி பெயர்க்கும் பணியில் ஈடுபடுத்தப்படுவோர் ஆயிரம் வார்த்தைகளுக்கு நாற்பது ரூபாயாக ஊதியம் தரப்படும். இவர்களின் பெயர்ப்பினை மீண்டும் ஒருகுழு மேலாய்வு செய்த பின்னரே அந்நூல் வெளியிடப் பெறும். பெயர்த்த நூல்களை அச்சிடுவதும், வெளியிடுவதும், விற்பனை செய்வதும் தமிழ்நாடு பாடப்புத்தகக் குழுவைச் சார்ந்தவை.

**ரா. ராகவ அய்யங்கார் நினைவு விழா:**

ஆகஸ்டுத் திங்கள் முதல் வாரத்தில் இராமனாதபுரம் அரசு மேல் நிலைப் பள்ளியில் காலஞ்சென்ற மகாவித்துவான் ரா. ராகவ அய்யங்காரின் முதலாண்டு நினைவு விழா சிறப்புடன் கொண்டாடப் பெற்றது.

ரா. ரா. அவர்கட்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த வள்ளல் பாண்டித் துரைத்தேவரின் தமிழ்த்தொண்டும், நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவிய அரும்பெருஞ்சால்பும் பாராட்டப்பட்டன. தமிழ் அகராதியின் ஆசிரியராகப் பணியாற்றியதோடு, வரலாற்றினையும் இலக்கியத்தையும் இணைத்துத் திறனாய்வினைத் தமிழில் வளர்த்த பெருமை ரா. ராவுக்கு உண்டு. கல்வெட்டு ஆய்விலும் ஈடுபாடு காட்டிய இத்தமிழறிஞரின் 'ஆராய்ச்சித் தொகுதி' ஒரு கட்டுரைக் களஞ்சியமாகும்

அரசவைக் கவிஞர்:

நாட்டு விடுதலைக்குப் பின், நாமக்கல்கவிஞர் இராமலிங்கம் பிள்ளையே முதல் அரசவைக்கவிஞர். 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'என்று போர்ப்பரணி பாடிய விடுதலைக்கவிஞர் இவர். இடைப்பட்ட சில ஆண்டுகள் அரசுக்கவிஞராக யாரும் அறிவிக்கப் படவில்லை. அண்மையில் கவியரசு கண்ணதாசனுக்கு இப்பெருமை கிடைத்துள்ளது மகிழ்ச்சியான செய்தியாகும். திரைப்படப் பாடல் களிலும்கூட இலக்கியச்சுவை குன்றுது, சொல்லும பொருளும் மிளிரக் கவிபாடும் திறமபடைத்த கவியரசினைத் தமிழக அரசு பாராட்டுதல் மிகவும் பொருத்தமே.

சின்னப்பாத் தேவர் மறைவு :

செப்டம்பர்த் திங்கள்— 2-ஆம் நாள் கோவையில் காலமான திரு. சாண்டோ சின்னப்பாத் தேவர் திரையுலகத்தின் மூலம் தெய்வீகத்தை வளர்த்தவர். தாம் எடுக்கும் எந்தத் திரைப்படத்தையும் பழனி முருகன் அடித்தலத்தில் வைத்து வணங்கி, அதன்பின்னரே அப்படத்தை வெளியிடுவது அவர் வழக்கம். மருதமலை முருகனை மக்கள் சென்று வழிபடுதற்கு ஏற்ற முறையில் மலைப்பாதை அமைக்கவும், அங்கு ஒளி விளக்கேற்றவும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை வாரி வழங்கிய வள்ளல் அவர். திரை உலகத்திலேயே நாணயம் மிக்கவர் என்ற நற்பெயர் எடுத்தவர். காட்சிக் கெளியனாய், கொடைவள்ளலாய்த் திகழ்ந்த இக்கொங்கு நாட்டுத் தேவர் மறக்க முடியாத அளவுக்குத் திரையுலகத் தொண்டு புரிந்தவர்.

இலங்கைச் செய்தி:

இலங்கைத் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக் கட்சியின் தலைவர் திரு. அமிர்தலிங்கம் சென்ற ஆண்டுத் திங்களில் கொழும்பு பாராளுமன்றக் கூட்டத்தொடரில் உரையாற்றும்போது இலங்கை அரசினர் தமிழ் பேசும் மக்களை இரண்டாந்தரக் குடிமக்களாக

நடத்துவதைக் கண்டித்தார். தமிழ் பேசும் அரசுப் பணியாளர்கள் சிங்கள மொழியில் தேர்வுபெற்றிருக்க வேண்டும் என்று புதியதாக வரும் அரசியல் சட்ட விதியினை நீக்கி விடவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இல்லையாயின் இலங்கைக்குள்ளேயே தனித்தமிழ் நாட்டுப் போராட்டத்தினை விரைவில் தொடங்க நேரிடும் என்றும் ஈழத்து அரசினரை இவர் எச்சரித்தார்,

செப்டம்பர்த் திங்களில் புதிய அரசியல் சட்டம் இங்கு நிறை வேற்றப்பட்டுள்ளது. எந்த அரசும் தேர்தல்களை ஒத்தி வைக்கக்கூடாது என்பதோடு, மொழி, மத, இனவேறுபாடின்றி மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதும் அரசியல் சட்டத்தின் முக்கியவிதிகளாகும். இப்போதைய சட்டப்படி, உள்ளாட்சித் தேர்தல்களில் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளருக்கும் ஓட்டுப் போடும் உரிமை அளிக்கப் படுகிறது என்பது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். ஏறத்தாழப் பத்து லட்சம் தோட்டத் தொழிலாளர்களின் தலைவராக விளங்கும் திரு. எஸ் தொண்டமான் இலங்கைக் குடியரசின் தொழில் வளர்ச்சி அமைச்ச-ராகத் தற்போது பதவி ஏற்றுள்ளார். வெளிநாட்டு வணிகத்தால் கிடைக்கும் மொதத வருமானத்தில்மூன்றில் இரண்டு பங்கினை ஈட்டித் தருகின்றோர் தேயிலைத் தோட்டங்களில் பணி புரியும் தமிழ் மக்களே யாவர். அவர்தம் உயரிய தலைவராக விளங்கும் தொண்டமானை அமைச்சராக்கியது பாராட்டத் தக்கதாகும்.

## இந்தித் திணிப்பு:

இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைத் திணிக்கும் மத்திய அரசின் தற்போதைய கொள்கை பிற்காலத்தில் நாட்டைத் துண்-டாக்கி விடும் என்று தமிழ்நாடு மேலவைத் தலைவர் ம. பொ. சிவஞான கிராமணி தஞ்சையில் பத்திரிகை நிருபர்களிடம் கூறினர். மொழிச் சிக்கலில் மத்திய, மாநில அரசுகளின் அணுகுமுறை தவருக இருக்-கிறது என்று சுட்டிக்காட்டினர். கான்வென்ட பள்ளிகளில் இந்தி கற்பிக்காத நிலையைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## காளிதாசர் விழா

உஜ்ஜயினியில் நிகழவிருக்கும் - ஆண்டுதோறும் நிகழும் - அகில இந்தியக் காளிதாசர் விழாவிற்குத் தமிழக அரசு ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளதென்று தெரிகிறது. பாராட்டப் படவேண்டிய செய்திதான்.

# சங்கச் செய்திகள்

**மதுரை தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்வு பற்றிய அறிவிப்புகள் மற்றும் தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்றவர்கள் பற்றிய குறிப்புகள் :**

1977—78—ஆம் ஆண்டில் உயர்நிலைப்பள்ளி பதினோராம் வகுப்பு, பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கும் சென்னைப் பல்கலைக் கழகக் கல்லூரிகளையும், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகக் கல்லூரி களையும் சார்ந்த புகுமுக வகுப்பு, இளங்கலை முதலாண்டு, இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கும் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய தமிழ்த் தேர்வில் மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் ரொக்கப் பரிசு பெற்ற மாணவர்களையும், ஒவ்வொரு உயர்பள்ளியிலும் கல்லூரி யிலும் முதன்மையாகத் தேர்ச்சி பெற்ற மாணவர்களையும் பிற மாண-வர்களையும் மதுரைத் தமிழ்ச் சங்கம் சார்பில் வாழ்த்துகின்றோம் மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வில் ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்-கான மாணவர்களைக கலந்து கொள்ளச் செய்துவரும் கல்லூரி முதல் வர்களுக்கும் தமிழ்த்துறைப் பேராசிரியர், துணைப் பேராசிரியர்களுக்கும் உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்கும் பிற தமிழன்பர்களுக்கும் எங்களது அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ரொக்கப்பரிசு பெற்றவர்கள் பற்றிய விபரம்

## பதினோரும் வகுப்பு

| வ. எண். | மாணவர் பெயரும் பள்ளியின் முகவரியும் | மதிப் பெண் | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | மா. சேதுராமன் (16806)<br>தூய மரியன்னை உயர்பள்ளி,<br>திண்டுக்கல். | 178/200 | முதல் பரிசு | ரூ. 100/- |
| 2. | இரா. கலைச்செல்வி (14781)<br>அண்ணாமலையார் மில்ஸ் மகளிர் உயர்பள்ளி,<br>நாகல் நகர், திண்டுக்கல். | 173/200 | 2-ம் பரிசு | ரூ. 25/- |
| 3. | க. முருக இலக்குமி (14786)<br>அண்ணாமலையார் மில்ஸ் மகளிர் உயர்பள்ளி,<br>நாகல்நகர், திண்டுக்கல். | 173/200 | 2-ம் பரிசு | ரூ. 25/- |

இரண்டாம் பரிசுத் தொகை ரூ. 50/-ஐ சம மதிப்பெண் பெற்ற இருவருக்கும் ரூ. 25/- வீதம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது

| வ. எண். | மாணவர் பெயரும் பள்ளியின் முகவரியும் | மதிப் பெண் | பரிசு விபரம் | பரிசுத் தொகை |
|---|---|---|---|---|
| 4. | கே. பொன்னுச்சாமி (2810)<br>அரசு உயர்பள்ளி<br>விசயாபுரம் (அஞ்.)<br>திருப்பூர் | 172/200 | மூன்றும்பரிசு | ரூ. 10/- |
| 5. | இரா. மூர்த்தி (3271)<br>அரசு உயர்பள்ளி,<br>மயிலம்பாடி (அஞ்)<br>பவானி (தா.) | 172/200 | ” ” | ரூ. 10- |
| 6. | ஏ. எஸ்தர் அருள்மொழி (3277)<br>அரசு மகளிர் உயர்பள்ளி,<br>நெகமம் (அஞ்.)<br>பொள்ளாச்சி (தா) | 172/200 | ” ” | ரூ. 10/- |

7. எல். தேன்மொழி (3293) 172/200 " " ரூ. 10/-
அரசு மகளிர் உயர்பள்ளி,
நெகமம் (அஞ்)
பொள்ளாச்சி (தா)

8. சிவ. சொர்ணம்(4937) 172/200 " " ரூ. 10-/-
ஸ்ரீ. சரசுவதி உயர்பள்ளி,
கோனுப்பட்டு-622503
புதுக்கோட்டை

மூன்றும் பரிசுத்தொகை ரூ. 25/-உடன் ரூ. 25/- சேர்த்து சம மதிப்பெண் பெற்ற ஐவருக்கும் ரூ. 10/-வீதம் பிரித்துக்கொடுக்கப் படுகிறது

9. சோ. நளினி (3235) 171/200 ஊக்கப்பரிசு ரூ. 10/-
சேவா நிலையம் பெண்கள் உயர்
பள்ளி
சிரியன் சர்ச் ரோடு-2
கோவை-2

10. பாதே. பி. ஆர். சாந்தி (20698) 171/200 " ரூ. 10/-
மாநகராட்சி மகளிர் உயர்பள்ளி
காமராசர் சாலை
மதுரை—9

11. எஸ். நாகராஜன் (21141) 171/200 " ரூ. 10/-
சேதுபதி உயர்பள்ளி
வடக்கு வெளி வீதி
மதுரை.

## பத்தாம் வகுப்பு

1. ஆர். சுப்பிரமணியன் (4507) 179/200 முதல் பரிசு ரூ. 100/-
அரசினர் உயர்பள்ளி,
சின்னதாராபுரம்
திருச்சி

2. பா. சாந்தி இராணி (774) 177/200 2-ம் பரிசு ரூ. 50/-
மேரி சார்ஜென்ட் உயர்பள்ளி
பாளையங்கோட்டை-627002

3. கு. குருமூர்த்தி (14743) 176/200 3-ம் பரிசு ரூ.25/-
சாவியர் அரசு உயர்பள்ளி
சத்திரப்பட்டி (அஞ்)
இராசபாளையம் (வழி)

4. கே. ஜானகி (3695) 175/200 ஊக்கப் பரிசு ரூ. 10/-
ஸ்ரீ வெங்கட கிருஷ்ண உயர்பள்ளி
கனியூர்-638203
உடுமலை (தாலுகா)

5. ஆர். சாரதா (20044) 175/200 ஊக்கப் பரிசு ரூ. 10/-
சி. எஸ். ஐ. மகளிர் உயர்பள்ளி
பசுமலை
மதுரை-4

6. வெ. இலக்குமி நாராயணன் (17409) 174/200 ஊக்கப் பரிசு ரூ.10/
அரசினர் உயர்பள்ளி
திருப்புவனம் (அஞ்)
முகவை (மாவட்டம்)

7. பா. பாசமனி (7944) 173/200 ஊக்கப் பரிசு ரூ.10/-
தூய சூசையப்பர் உயர் பள்ளி
மஞ்சக் குப்பம்,
கடலூர்-1

8. வி. ரேவதி( 21003) 173/200 ஊக்கப் பரிசு ரூ. 10/-
அரசு மகளிர் உயர்பள்ளி
மதுரை—10

## மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்
## புகுமுக வகுப்பு

1. எல். பிரதிபா (368) 150/200 முதற் பரிசு ரூ. 100/-
வே. வ வன்னியப் பெருமாள்
மகளிர் கல்லூரி
விருதுநகர்.

2. ஜே. பால்ராஜ் ஜான்சன் (4220) 145/200 2-ஆம் பரிசு ரூ.50/-
அமெரிக்கன் கல்லூரி,
மதுரை-2

3. டி. உமாவேலம் (652) 144/200 மூன்றும் பரிசு ரூ. 25/-
தூய மரியன்னை மகளிர் கல்லூரி
தூத்துக்குடி

### பி. ஏ. முதலாண்டு

1. டி. ஜீவகனி எலிசபெத் (10069) 66/100 முதல் பரிசு ரூ. 100
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை.

2. பி. வி. ஏகநாதன் (10104) 59/100 2-ம் பரிசு ரூ. 50/-
தியாகராசர் கல்லூரி,
மதுரை

3. எம். ஆயிஷா பீபி (10021) 52/100 3-ம் பரிசு ரூ. 25/-
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர்
கல்லூரி,
பழனி.

## பி. ஏ. இரண்டாமாண்டு

1. பி. வி, வனஜா (12034) 134/200 முதல் பரிசு ரூ. 100/-
பழனி மகளிர் கல்லூரி, பழனி

2. டி. கே. வெங்கடாசலபதி (12100) 133/200 2-ஆம் பரிசு ரூ. 50/-
அரசு கலைக் கல்லூரி,
மேலூர்.

3- எஸ். மைதிலி (12071) 130/200 மூன்றும் பரிசு ரூ. 25/-
ஸ்ரீ சத்குரு சங்கீத வித்யாலயம்
மதுரை.

## சென்னைப் பல்கலைக் கழகம்
## புகுமுக வகுப்பு

1. அர்த்த நாரீஸ்வரன் (754) 148/200 முதற் பரிசு ரூ. 10/-
சிக்கய்ய நாயக்கர் கல்லூரி
ஈரோடு

2. ஆர். ரவிசங்கர் (392) 136/200 2-ம் பரிசு ரூ. 50/-
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை

3. வி. ஜெயராமன் (1743) 135/200 3-ம் பரிசு ரூ. 25/-
அரசு கலைக் கல்லூரி
சேலம்-8

## பி. ஏ. முதலாண்டு

1. கே. உமா பார்வதி (6140)
2. வி. வசுமதி (6141)
3. டி. அழகம்மை (6150)
4, எஸ். பாலையா (6156)
5. திலகராணி ஸ்வைன்ஸ் (6156)

மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை

} 72/100 முதற் பரிசு ரூ. 100/.

முதல் பரிசுத் தொகை ரூ. 100/- ஐ சம மதிப்பெண் பெற்ற ஐவருக்கும் ரூ. 20/-வீதம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

6. கே. இராமானுசம் (6058) 68/100 2-ம் பரிசு ரூ. 50/-
அரசு ஆண்கள் கலைக் கல்லூரி
உடுமலைப் பேட்டை
கோவை மாவட்டம்

7. ஏ. பாண்டியன் (6394) 62/100 3-ம் பரிசு ரூ. 15/-
அரசு கலைக் கல்லூரி
சேலம்-8

8. டி. சுப்பிரமணியன் (6284) 62/100 3-ம் பரிசு ரூ. 15/-
சிக்கய்ய நாயக்கர் கல்லூரி
ஈரோடு-4

மூன்றும் பரிசுத் தொகை ரூ. 25/-உடன் ரூ. 5/-சேர்த்து இரண்டு பேருக்கும் ரூ. 15/-வீதம் அளிக்கப்படுகிறது.

பி. ஏ. இரண்டாமாண்டு

1. வி. ஆர். வெங்கடாசலம் (7209) 79/100 முதல் பரிசு ரூ. 100/-
சிக்கய நாயக்கர் கல்லூரி
ஈரோடு-4

2. வி. விசயகுமாரி (7107) 68/100 2-ம் பரிசு ரூ. 50/-
3. என். தனபாக்கியம் (7118)
மாமன்னர் கல்லூரி
புதுக்கோட்டை

இரண்டாம் பரிசுத் தொகை ரூ. 50/-ஐ சம மதிப்பெண் பெற்ற இருவருக்கும் ரூ. 25/-வீதம் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

3. என். இராதா கிருஷ்ணன் [7349)62/100 3-ம் பரிசு ரூ. 25/-
ம. ரா. அரசு கலைக் கல்லூரி
மன்னார்குடி

# தேர்வு பற்றிய அறிக்கை

பேரன்புடையீர், வணக்கம்.

பாலவநத்தம் சமீன்தார் வள்ளல். பாண்டித்துரைத் தேவர் அவர்கள் புகழ்பெற்ற இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தைக் கூடல் மாநகரில் 1901-ஆம் ஆண்டு நிறுவினர்கள் தேவரவர்கள் இந்நான் காம் தமிழ்ச் சங்கததை நிறுவியதன் நோக்கம் மிக உயர்ந்ததாகும். பாண்டிய மன்னர்களால் தோற்றுவிக்கபபட்ட முதல், இடை, கடைச் சங்கக் காலங்களில் செந்தமிழ் சிறப்புற்று விளங்கியது. அதற்குப்பின் தமிழ்மொழி அதன் சிறபபிலிருத்து படிப்படியாகக் குறைந்துகொண்டே வந்தது. தமிழில் சிறந்த புலமை பெற்றவர்களை உருவாக்க எண்ணிய தேவரவர்கள் தமிழ மொழிக்கூடம் ஒன்றை நிறுவினர். இன்றைக்கு கவிஞர்களாகவும் தமிழ் அறிஞாகளாகவும் இருப்பவர்களில் பலர் இம் மொழிக்கூடத்தில் தங்கி முறையாகக் கல்வி பயின்று பண்டிதம் என்னும் பட்டத்தைப் பெறறவர்களாவர். ஓலைச்சுவடியில் வாழ்ந்த பல்வேறு கருத்துக்களையும் இலககிய, இலக்கணங்களையும் மருத்துவம் முதலான வறறையும அசசு இயற்றி நூல வடிவத்தில் வெளியிட்டார்கள். பல்லோராலும பொறறததகக அரிய கருததுக்கள் அடங்கிய செந்தமிழ் என்னும திஙகள இதழ் ஒனறு வெளியிட்டார்கள். அன்று மலர்ந்த செநதமிழ இனறும மலர்ந்து மணம் வீசுகிறது. அன்று தேவரவர்கள் நிறுவிய தமிழ மொழிக்கூடம் இன்று பல்கலைக்கழக இணைப்புப் பெற்ற செந்தமிழ்க் கலலூரியாக உருவாகி அதில் புலவர், இளம் இலக்கியம், இளங்கலை-சிறப்புத்தமிழ் (pulavar 2-D. Tamil, BLit, B.A. Br. XII-b Specialised Tamil) ஆகிய பிரிவுகளுக்கு வகுப்பு நடத்தும் அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது.

தேர்வின் நோக்கம்:

உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் பொதுத் தேர்விலும் கல்லூரி மாணவர்கள் பல்கலைக் கழகத் தேர்விலும் தமிழில் தேர்வில் தோல்வி-யடைந்துவிடக் கூடாது என்ற உயர்ந்த எண்ணத்தில் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் தொடங்கிய தமிழ்த் தேர்வு கடந்த 72ஆண்டுகளாகத் தமிழ் நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் செவ்வனே நடத்தப்பெற்று வருகிறது. இத்தேர்வில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டு பெரும் பயன் பெற்று வருவதைத் தமிழன்பர்கள் நன்கு அறிவார்கள்.

## தேர்வின் அமைப்பும் பயனும் :-

பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு அரசு வகுத்துள்ள தமிழ்ப்பாடப் பகுதிகளும் கல்லூரிகளுக்கு பல்கலைக் கழகம் வகுத்துள்ள தமிழ்ப் பாடங் களும் தமிழ்ச் சங்கத் தமிழ்த் தேர்விற்கு உரிய பாடப் பகுதிகளாகும். அரசும் பல்கலைக்கழகமும் எம்முறையில் வினாக்கள் அமைத்துத் தேர்வுகள் நடத்துகின்றனவோ அம்முறையிலேயே தமிழ்ச் சங்கமும் வினாக்கள் அமைத்துத் தேர்வு நடத்தி வருகின்றது. பொதுத் தேர்விற்கு (public Examination) முன்னதாகவே, தமிழ்ச் சங்கம் தேர்வினை நடத்தி மாணவர்களுக்கு அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்ணை தெரிவித்து வருகின்றது. அதனால் மாணவர்கள் தங்கள் நிலையினை உணர்ந்து பொதுத் தேர்விற்கு நன்முறையில் தங்களைத் தயார் செய்து கொள்ள தமிழ்ச் சங்கத் தேர்வு பெரும் வாய்ப்பளிக்கின்றது.

## சான்றிதழ் சிறப்பும் பரிசும்: -

தமிழ்ச் சங்கத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கட்கு அவர் கள் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் சான்றிதழ் அளிக்கப் படுகிறது. ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் முதன் மையாகத் தேர்ச்சி பெறும் மாணவர்கட்குப் பரிசாக நூல்கள் வழங்கப் படுகின்றன. மாநில அளவில் முதல் மூன்று நிலையில் தேர்ச்சி பெறு பவர்களுக்கும் பாராட்டும் அளவிற்கு மதிபபெண் பெற்று தேர்ச்சி பெறுபவர்களுக்கும் ரொக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன. அம்-முறையில் சென்ற ஆண்டு மட்டும் நாற்பத்துமூன்று மாணவர்கள் ரொக்கப் பரிசினைப் பெற்றுள்ளார்கள். என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துககொள்கிறோம். ரொககப் பரிசு பெற்ற மாணவர்கள் பற்றிய விபரங்கள் இவ்இதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்ச் சங்கச் சான்றிதழ் பெற்றிருப்பவர்களுக்குத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் உண்டு.

## தேர்வு நாள்

| | |
|---|---|
| உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு (X-standard) | 10-2-79 |
| கல்லூரி | 17, 19-2-1979 |

## தேர்வுக்கட்டணம்:

| | |
|---|---|
| கல்லூரி புதுமுக வகுப்பு | 3.25 (2தாள்கள்) |
| சிறப்புத் தமிழ் (Adv. Tamil) | 1.75 (1 தாள்) |

பட்ட வகுப்பு முதலாண்டு 2.00 (1 தாள்)
பட்ட வகுப்பு இரண்டாம்ஆண்டு 2.00 (1 தாள்)
உயர்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு - ரூ. 2. 75

**கட்டணம் அனுப்பவேண்டிய இறுதி நாள் :**

**உயர்பள்ளிகள் தேர்வுக் கட்டணம் அனுப்ப வேண்டிய இறுதி நாள் :** 19-1-1979

**கல்லூரிகள்** " " " 25-1-1979

**உங்கள் பணி :**

தேர்வினை குறித்த காலத்தில் செவ்வனே நடத்திட மாணவர்களின் எண்ணிக்கையினை முன்கூட்டியே அறிந்திட வேண்டிய கட்டாய சூழ்நிலையில் இருக்கின்றோம். ஆகையால் இவ்வறிக்கையைக் கண்ணுற்ற உடனே மாணவர்களின் பெயர்ப்பட்டியலை அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தேர்வு அறிக்கைகளும் மாணவர்கள் விண்ணப்பத்தாட்களும் முதல்வர் அவர்களுக்கும் தலைமை ஆசிரியர் அவர்களுக்கும் அனுப்பி இருக்கின்றோம். மேலும் வேண்டினால் மாணவர்களின் எண்ணிக்கை-யினைத் தெரிவித்துத் தேவையான விண்ணப்பத்தாட்களைப் பெற்றுக் கொள்ளவும்.

தேர்வுக் கட்டணம் அனுப்பும்போது வரவு, செலவு விபரத் தாளினை (From-3) ப் பூர்த்தி செய்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

விடைத்தாள் மதிப்பிட விரும்பும் ஆசிரியர்கள் பெயர்ப்பட்டியலை மாணவர்களின் பெயர்ப்பட்டியலோடு சேர்த்து அனுப்பும்படி வேண்டுகிறோம்.

**தேர்வு நடத்துவதற்கான செலவுத் தொகை :-**

15 மாணவர்களுக்கு மேல் 36 மாணர்களுக்குள் தேர்வெழுதும் உயர்பள்ளிகள் ரூ. 15/-ம் 36 மாணவர்களுக்கு மேல தேர்வில் கலந்து கொள்ளும் உயர்நிலைப் பள்ளிகள் கல்லூரிகள் தேர்வுக் கட்டணத் தொகையில் பதினைந்து விழுக்காடு (15%) தேர்வுச் செலவிற்காகப் பிடித்துக் கொண்டு மீதித் தொகை முழுவதையும் சங்கத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். 15 மாணவர்களுக்குக் குறைவாகத் தேர்வில் கலந்து கொள்ளும் உயர்நிலைப் பள்ளிகள் செலவுத்தொகை

ஏதும் பிடித்துக் கொள்ளாமல் முழுத் தொகையினையும் சங்கத்திற்கு அனுப்ப வேண்டும். தேர்வு நடத்தும் வகையில் ஆகும் அனைத்துச் செலவிற்கும் நாங்கள் குறிப்பிட்டுள்ள இத்தொகைக்கு மேல் செலவு ஆனால் அத்தொகையை மாணவர்களிடமிருந்து வசூல் செய்து கொள்ளலாம்.

தேர்வுக் கட்டணம் விண்ணப்பத்தாள் அனுப்ப வேண்டிய முகவரி:-

செயலாளர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை- 625001

குறிப்பு:-

தேர்வில் கலந்து கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கையைத் தோராயமாக முன்கூட்டியே தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். தங்கள் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளியாக (Higher sceondary school) மாற்றப்பட்டுள்ளதா இல்லையா என்பதையும், தங்கள் பள்ளி இவ்வாண்டு சங்கத் தேர்வில் கலந்து கொள்ள இயலவில்லை என்றாலும் தெரிவிக்கும்படி வேண்டுகிறோம்.

இந்நான்காம் தமிழ்ச் சங்கத்தின் நற்பணிகள் நாளும் செழிக்க உங்களுடைய ஒத்துழைப்பின்மூலம் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும்படி சான்றோர் பெருமக்களை அன்புடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

மாட்சிமை தங்கிய இராமநாதபுரத்தரசர் — தங்கள் அன்புள்ள

ஆர். எஸ். இராமநாதசேதுபதி
தலைவர்

டி. பி. எம். பெரியசுவாமி
எம். எல். ஏ.,
செயலாளர்

3609



இராமநாதபுரத்தரசர் வழித் தோன்றல், தமிழ்ச் சங்கத்தின் நிலைத்ததலைவர் மாட்சிமை பொருந்திய ஆர். எஸ். இராமநாத சேதுபதி மன்னரவர்கள். அமைச்சர் பெருமக்கள் மாண்புமிகு கா. காளிமுத்து எம். ஏ., மாண்புமிகு கா. இராசா முகம்மது எம். ஏ., பி. எல்., ஆகியவர்களைப் பாராட்டிச் சிறப்பிக்கின்றூர்.

## "செந்தமிழ்" ஆசிரியர் குழு.


பேராசிரியர் டாக்டர். சுப. அண்ணாமலை, எம். ஏ., பி. எச்டி.,
முதல்வர், தியாகராசர் கல்லூரி, மதுரை-625009.

பேராசிரியர் டாக்டர். கோ. விஜயவேணுகோபாலன், எம். ஏ., பி. எச்டி.,
மதுரைப் பல்கலைக்கழகம், மதுரை-625021.

பேராசிரியர் பழனி. அரங்கசாமி, எம். ஏ., பி. ஓ. எல்.,
அஞ்சல் வழிக் கல்வித்துறை, மதுரைப் பல்கலைக்கழகம்,
மதுரை-625021,

உரையாசிரியர் புலவர். இரா. இளங்குமரன்
தமிழாசிரியர், மு. மு. உயர்நிலைப்பள்ளி,
திருநகர், மதுரை-625006.



ஆசிரியரும் வெளியிடுபவரும்:

டி. பி. எம். பெரியசுவாமி, எம். எல். ஏ.,
செயலாளர், மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 625 001.



முகவரி:

ஆசிரியர்,
— செந்தமிழ் —
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
54-தமிழ்ச் சங்கச்சாலை — மதுரை-1.



மணியம் பிரஸ், மதுரை—9.